



புதுகை
# வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351






செவ்வாய் ❖ நவம்பர். 29, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 55 ❖ ரூ.10


## அறிவியல் ஆர்வத்தை மேம்படுத்த பள்ளிகளில் வானவில் மன்றம்

# துவக்கி வைப்பு!

## திருச்சி காட்டூர் ஆதிதிராவிடர் பள்ளி விழாவில் முதல்வர் பங்கேற்பு பள்ளிக்கல்வித்துறையின் ஒரு புதுமையான முயற்சி என பெருமிதம்

**திருச்சி, நவ.29-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் திருச்சி, அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் நேற்றும், இன்றும் 2 நாட்கள் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார். இதற்காக நேற்று (திங்கட்கிழமை) காலை 9 மணிக்கு சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் புறப்பட்டு, காலை 9.50 மணிக்கு திருச்சி சென்றார். அங்கிருந்து கார் மூலம் புறப்பட்டு, காலை 10.30 மணிக்கு திருச்சி காட்டூர் ஆதிதிராவிடர் பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்குச் சென்றார். அங்கு, அரசு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு அறிவியல் மற்றும் கணித பாடங்களில் ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் ரூ.25 கோடி செலவில் 'வானவில் மன்றம்' திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.**

'வானவில் மன்றம்' என்பது தமிழக பள்ளிக்கல்வித்துறையின் கீழ் செயல்படும் அரசுப் பள்ளிகளில் 6 முதல் 8-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் அறிவியல் மனப்பான்மையை மேம்படுத்துவதற்காக முதல் முறையாக மேற்கொள்ளப்படும் ஒரு புதுமையான முயற்சி ஆகும். இதற்காக ஆர்வமும் செயல்திறனும் மிக்க கருத்தாளர்கள் இந்தத் திட்டத்தை பள்ளிகளில் செயல்முறையில் மாணவர்களுக்கு விளக்கிட பள்ளிக்கு வருவார்கள். தேவையான கருவிகளையும் அவர்களே கொண்டு வருவார்கள். இதையடுத்து பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களின் உதவியுடன் பல்வேறு சோதனைகளைச் செய்துகாட்டி மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்த உதவுவார்கள்.



6முதல்8-ம்வகுப்புகளுக்கு வகுப்பறைகளுக்குள் கற்பிக்கப்படும் பாடங்களோடு தொடர்பான அறிவியல், கணிதப் பரிசோதனைகளைச் செய்வதற்கு குறைந்த விலையில் பொருள்களை வாங்க, ஒரு பள்ளிக்கு முதல் கட்டமாக ரூ.1,200 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து வாரந்தோறும் பாடத்துடன் தொடர்புடைய கருத்துகளை விளக்குவதற்கு ஏற்ற பொருள்களை குறைந்த விலையில் வாங்கி, பல்வேறு சோதனைகளைச் செய்து காட்ட வேண்டும்.

பின்னர் மாணவர்களை கேள்வி கேட்க ஊக்குவிக்க வேண்டும். 'ஸ்டெம்' (அறிவியல்), தொழில் நுட்பம், பொறியியல், கணிதம் குறித்து கருத்தாளர்கள் பள்ளிக்கு வரும்போது ஆசிரியர்கள் அவர்களுடன் இணைந்து பரிசோதனைகளைச் செய்து காட்டவும் மற்றும் வானவில் மன்றத்தில் மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்கவும் ஊக்குவிக்க வேண்டும். இவ்வாறு முதல்வர் பேசினார்.

வானவில் மன்றத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்ததும் 13 ஆயிரத்து210 அரசு நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலும் வானவில் மன்றம் தொடங்கப்பட்டது. நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பள்ளிக்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் காகர்லா உஷா, பள்ளிக்கல்வி ஆணையர் நந்த குமார், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்குநர் சுதன், திருச்சி மாவட்ட கலெக்டர் பிரதீப் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி முடிந்ததும், திருச்சியில் இருந்து பெரம்பலூருக்கு முதல்வர் ஸ்டாலின் புறப்பட்டு சென்றார். மதியம் 12 மணிக்கு பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை தாலுகா எறையூரில் சிப்காட் தொழில் பூங்காவுக்கு அடிக்கல் நாட்டினார். பின்னர் பிற்பகல் 4 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரத்தில் உள்ள மாளிகைமேடு அகழ்வாராய்ச்சி பணிகளை பார்வையிட்டார். அங்கிருந்து புறப்பட்டு, அரியலூரில் தங்கினார்.

இன்று (செவ்வாய்க்கிழமை) காலை அரியலூர் அருகே கொல்லாபுரத்தில் பெரம்பலூர்-அரியலூர் மாவட்டங்களுக்கு சேர்த்து நடைபெறும் விழாவில் கலந்துகொண்டு மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசுகிறார். புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற பணிகளை தொடங்கியும் வைக்கிறார்.

பெரம்பலூர் விழாவில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு. தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராசா, தொல். திருமாவளவன், சட்டமன்ற உறுப்பினர் பிரபாகரன் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## அரியலூர் அரசு சிமெண்ட் ஆலை சுரங்கம் சீரமைத்து விளையாட்டுத்துறைக்கு முதல்வர் வழங்க கோரிக்கை

*அரியலூர், நவ,29-*

*அரியலூர் அரசு சிமெண்ட் ஆலை சுரங்கத்தை சீரமைக்க, நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என, தமிழக முதல்வருக்கு சமூக ஆர்வலர் கோரிக்கை விடுத்துள்ளார்.*

*இதுபற்றி, அரியலூரை சேர்ந்த சமூக ஆர்வலர் ராஜராஜன் விடுத்துள்ள கோரிக்கை வருமாறு:*

*அரியலூர் வடக்கு வருவாய் கிராமத்தில் 29ம் தேதி இன்று நடைபெறும் அரசு விழாவுக்கு வரும் முதல்வரே வருக. உங்கள் வருகை, எங்கள் அரியலூர் வடக்கு கிராம மக்களுக்கு காலம் காலமாக பயன் பெறும் வகையில் மாற்றம் செய்து தரும்படி கோரிக்கை வைக்கிறோம்.*



*விழா நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு அருகேயே, அரியலூர் வடக்கு வருவாய் கிராமத்திலேயே, விழா மேடைக்கு எதிரே, கிழக்கு பகுதியில், 40 ஆண்டுகளுக்கு முன் தொடங்கிய, தமிழக அரசின், அரசு சிமெண்ட் ஆலை வெட்டி முடித்த சுண்ணாம்பு கல் எடுத்து முடித்த 20 அடி ஆழம் கொண்ட சுரங்க பகுதி நூற்றுகணக்கான ஏக்கர், பல கி.மீ., நீளத்தில் பரந்த மைதானம் உள்ளது.*

*பல கீ.மீ நீளம் உள்ளதால் அது குழி போல அல்லாமல் பரந்து விரிந்து பெரிய மைதானமாக காணப்படுகிறது. அதில் ஓரத்தில் ஒட்டியுள்ள மீதி சுண்ணாம்பு மட்டும் எடுக்கப்படுகின்றது. அந்த இடம் முழுவதும் தமிழக அரசின் பெயரிலேயே நிலம் கையாகப்படுத்தப் பட்டது. தமிழக அரசின் பெயரிலேயே பட்டா உள்ளது.*

*தற்போதுசுண்ணாம்பு கல் தீர்ந்து, சாதாரண மண் உள்ள 50 ஏக்கரை விளையாட்டு துறைக்கு ஒதுக்கி, அதில் இரண்டு கால் பந்து மைதானம், இரண்டு ஹாக்கி மைதானம், இரண்டு கிரிக்கெட் மைதானம், இரண்டு டென்னிஸ் மைதானம், இரண்டு ஓட்ட பந்தய மைதானம் என அமைத்து, சுற்றி பத்தாயிரம் மர கன்றுகளை நட்டு பசுமை விளையாட்டு மைதானமாக மாற்றி தரும்படி அரியலூர் மக்கள் சார்பில் கோரிக்கைவைக்கிறோம்.*

*இப்பகுதி மக்கள் விளையாட சுரங்க நிதியில் இருந்து இந்த முடிந்த சுரங்கத்தை சீரமைத்து 50 ஏக்கரை விளையாட்டு துறைக்கு வழங்கும்படி அரியலூர் வடக்கு கிராம மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.*




# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்









| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,921 | Rs.5,323 |

# பா.ம.க., தற்போது எந்தக்கட்சி கூட்டணியிலும் இல்லை: அன்புமணி ராமதாஸ் திட்டவட்டம்

மயிலாடுதுறை, நவ.29–

மயிலாடுதுறையில் நடந்த பா.ம.க. நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்ட அந்த கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் நிருபர்களிடம் கூறியதாவது:



தமிழகத்தில் தொடங்கப்படும் புதிய தனியார் தொழில் நிறுவனங்களில் தமிழர்களுக்கு 80 சதவீதம் வேலை வழங்குவதற்கான தனி சட்டத்தைசட்டசபையில் கொண்டுவர வேண்டும். டெல்டாமாவட்டங்களில் கஞ்சா, குட்கா போன்ற போதைப்பொருட்கள் பழக்கம் அதிகமாக இருப்பதை தடுப்பதற்கு தமிழக அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

போதை பொருள் தடுப்பு பிரிவில் போதுமான போலீசார் இல்லாததால் இந்த குற்றங்கள் அதிகரிப்பதாக கூறப்படுகிறது. அதனால் போதை தடுப்பு பிரிவுக்கு 20 ஆயிரம் போலீசாரை பணியமர்த்த வேண்டும். இல்லையென்றால் இளைய சமுதாயம் சீரழிந்துவிடும்.

பா.ம.க., தற்போது எந்தக் கட்சியுடனும் கூட்டணியில் இல்லை. கடந்த உள்ளாட்சி தேர்தலில் கூட பா.ம.க., தனித்துத்தான் போட்டியிட்டது. பொருளாதார அடிப்படையில் 10 சதவீத இடஒதுக்கீடுஅளித்திருப்பது ஏற்புடையது அல்ல. தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தி எண்ணிக்கைக்கு ஏற்ப இட ஒதுக்கீடு 100 சதவீதம் வழங்குவதற்கு சட்ட மசோதா நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு அன்புமணி ராமதாஸ் கூறினார். பேட்டியின் போது, பா.ம.க., கவுரவ தலைவர் ஜி.கே.மணி எம்.எல்.ஏ., மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# தி.மு.க., மீதான மக்கள் கோபத்தின் குரலாக பா.ஜ.க., ஒலிக்கும்: அண்ணாமலை அறிவிப்பு

சென்னை, நவ.29–

சென்னை எழும்பூரில் தனியார் நிறுவனம் சார்பில், நடைபெற்ற இந்திய அரசியலமைப்பு விழிப்புணர்வு பேரணி நிறைவு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாநில பா.ஜ.க., தலைவர் அண்ணாமலை பின்னர் செய்தியாளர்களிடம் கூறியுள்ளதாவது:



பாதுகாப்புப் பணியில் இருக்கும் ராணுவ வீரர் ஒருவரை அரசியல் கட்சியினர் மிரட்டும் வகையில் தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு இருந்து வருகிறது. நம்மை எதுவும் செய்ய மாட்டார்கள். நாம் ஆளுங்கட்சியாக இருக்கிறோம் என்ற தைரியம். நான் அவரிடம் எனது செல்போன் நம்பரை கொடுத்துள்ளேன். எந்த உதவியாக இருந்தாலும் பா.ஜ.க., செய்யும் என்று அவரிடம் தெரிவித்துள்ளேன்.

தி.மு.க., அரசு மீது பொதுமக்கள் இடையே இருக்கும் வெறுப்பு ஒவ்வொரு நாளும் வெளிப்பட்டு வருகிறது. தி.மு.க., அரசு தொடர்ந்து தவறான பாதையில் சென்று கொண்டிருக்கிறது. பால்விலை உயர்வை கண்டித்து பா.ஜ.க., சார்பில் 1,200 இடங்களில் போராட்டங்கள் நடைபெற்றன. தவறான பாதையில் செல்லும் திமுக அரசின் போக்கை கண்டித்து தமிழகத்தில் அடுத்த கட்டமாக 5 ஆயிரம் இடங்களில் போராட்டம் நடத்தப்படும்.

மக்களின் அன்பை பெற வேண்டும் என்ற நோக்கத்தில் பா.ஜ.க., செயல்பட்டு வருகிறது. தமிழகம் முழுவதும் கிராமப் பகுதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மக்களை சந்திக்க உள்ளேன். தி.மு.க., அரசு மீதான மக்கள் கோபத்தின் குரலாக பா.ஜ.க., ஒலிக்கும். இவ்வாறு அண்ணாமலை தெரிவித்தார்.




# மின் கம்பி மீது மோதி அந்தரத்தில் தொங்கிய சிறிய ரக விமானம்: இருவர் உயிர்தப்பினர்

வாஷிங்டன், நவ.29–

அமெரிக்காவின் மேரிலேண்ட் மாகாணம் மொவ்ண்ட்கொமெரி நகரம் உள்ளது. இந்நகரின் ஹைதுர்பர்க் என்ற பகுதியில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான வீடுகள் உள்ளன.

இந்நிலையில், மொவ்ண்ட்கொமெரி நகருக்கு மின் விநியோகம் வழங்கும் உயரமுத்த மின் கம்பிமீதுஞாயிற்றுக்கிழமை இரவு சிறிய ரக விமானம் மோதியது. 2பேர் பயணித்த சிறிய ரக விமானம் மின் கம்பி மீது மோதி அந்தரத்தில் தொங்கியது. விமானம்மோதியதால்மின் இணைப்பு தடைபட்டது. இதனால், 1லட்சம் வீடுகள், தொழில்நிறுவனங்களில் மின் இணைப்புஇல்லாமல் பரிதவித்தனர்.

இதுகுறித்து தகவலறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று உயரமுத்த மின்கம்பி மீது மோதி



அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் விமானத்தில் சிக்கிய 2 பேரையும் பத்திரமாக உயிருடன் மீட்டனர். மேலும், விமானம் மோதியதால் இருளில் மூழ்கிய நகருக்கு மின் இணைப்பை மீண்டும் வழங்கும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

சிறிய ரக விமானம் வெடித்து சிதறியிருந்தால் அதிலிருந்தஇருவர்பலியாவது மட்டுமின்றி, பெரிய அளவில் மின்துறையில் பாதிப்பு ஏற்பட்டிருக்கும், அதிர்ஷ்டவசமாக அசம்பாவித சம்பவம் ஏதும் நிகழவில்லை என்று மீட்புக்குழுவினர் நிம்மதி அடைந்தனர்.

# கிட்வட் அருவியில் செல்ஃபி மோகத்தால் விபரீதம்! கர்நாடக மாணவிகள் 4 பேர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

பெலகாவி, நவ.29–

கிட்வட் அருவியில் செல்ஃபி எடுத்தபோது, கர்நாடக மாணவிகள் 4 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். கர்நாடக மாநிலம் பெலகாவி நகரிலுள்ள அராபிக் பயிற்சிமையத்தைச்சேர்ந்த 40 மாணவிகள், கர்நாடகா - மகாராஷ்டிரா எல்லை அருகேயுள்ள கிட்வட் அருவிக்கு சனிக்கிழமை சுற்றுலா சென்றனர்.



பெலகாவி நகரிலிருந்து 18 கி.மீ., தொலைவில் உள்ள இந்த அருவி, கோல்காபூர் மாவட்டம் சந்கட் தாலுகாவில் உள்ளது. மாணவிகள் சிலரின் பெற்றோரும் உடன் சென்றிருந்தனர். அருவி நீரில் மாணவிகள் அனைவரும் குளித்து விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களில் 5 மாணவிகள் சற்று முன்னேறி, தண்ணீர் விழும் இடத்துக்கு அருகில் சென்று, செல்ஃபி எடுத்துக் கொண்டிருந்தனர்.

அப்போது, அவர்கள் கால் இடறி, 15 அடி பள்ளத்தில் தேங்கியுள்ள தண்ணீரில் விழுந்தனர். இவர்களது அலறல் சப்தம் கேட்டு, உள்ளூர் இளைஞர்கள் சிலர் தண்ணீரில் குதித்து, மாணவிகளை மீட்க முயன்றனர். அதற்குள் 4 மாணவிகள் தண்ணீரில் மூழ்கி விட்டனர். ஒருவர் தத்தளித்துக் கொண்டிருந்தார்.

பின்னர்5மாணவிகளும் மீட்கப்பட்டு, பெலகாவி மருத்துவ அறிவியல் மையத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் 4 பேர் ஏற்கெனவே இறந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். சுயநினைவின்றி இருந்த ஒரு மாணவி, தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் அபாய கட்டத்தைத் தாண்டிவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து பெலகாவி காவல்துணை ஆணையர் (சட்டம்-ஒழுங்கு) ரவீந்திர கடாடி கூறுகையில், "கிட்வட் அருவி மகாராஷ்டிரா காவல் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் உள்ளது. அவர்களது அனுமதியுடன், உயிரிழந்த மாணவிகள் ஆசிய முஜாவர் (17), குத்ரஷியா ஹாசம் படேல் (20), ருக்கஷா பிஸ்தி (20), தஸ்மியா (20) ஆகிய 4 பேரின் உடல்கள் பிரேதப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும். இவர்கள் அனைவரும் பெலகாவி நகரைச் சேர்ந்தவர்கள்," என்றார். இச்சம்பவம் தொடர்பாக, கோல்காபூர் மாவட்டம் சந்த்கட் காவல் நிலைய போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

# முதுமலையில் பனிப்பொழிவால் உணவு நீர் தேடி இடம்பெயரும் விலங்குகள்!

நீலகிரி, நவ.29–

நீலகிரி மாவட்டத்தில் வட கிழக்கு பருவ மழை அக்டோபரில் தொடங்கி நவம்பர் இரண்டாவது வாரம் வரை பெய்யும். பின்னர் பனிக்காலம் ஜனவரி மாதம் வரை நீடிக்கும். இந்நேரங்களில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உறை பனி பொழியும். இதனால் தேயிலை, காய்கறிசெடிகள் மற்றும் புல்வெளிகள் கருகிவிடும்.



இந்நிலையில், நடப்பாண்டு புயல் சின்னம் காரணமாக பனிப்பொழிவு தாமதமாக தொடங்கியுள்ளது. உதகை, குன்னூர், கோத்தகிரி, மஞ்சூர், மசினகுடி, முதுமலைஆகியபகுதிகளில் பனியின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. முதுமலை புலிகள் காப்பகத்திலுள்ள தாவரங்கள் மற்றும் புற்கள் காய்ந்து வருகின்றன. பசுமை குறைந்து வருவதால், உணவு மற்றும் தண்ணீர்தேடி விலங்குகள் இடம்பெயர்ந்து வருகின்றன. தற்போது, சாலையோரங்களில் யானைகள் உட்பட விலங்குகளை காண்பது அரிதாகிவிட்டது.

முதுமலை புலிகள் காப்பகத்தில் வனத்தீ பரவுவதைதடுக்க, தீத்தடுப்பு நடவடிக்கைகளில் காப்பக நிர்வாகம் ஈடுபட்டுள்ளது. இந்தாண்டு பருவ மழையால். காப்பகத்தில் தாவரங்களின் வளர்ச்சி அபரிமிதமாக உள்ளது. இதனால், பனியால் அவை கருகிதீப்பிடிக்கும் அபாயம் அதிகரித்துள்ளது.

இது தொடர்பாக வனத்துறையினர் தெரிவித்ததாவது:

முதுமலையில்தற்போது அந்நிய தாவரங்களான உண்ணி, பார்த்தீனியம் செடிகள் அகற்றப்பட்டு வருகின்றன. பனிக்காலம் தொடங்கியுள்ளதால், வனத்தீ பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. வனத்தீ பெரும்பாலும் செயற்கையாகவே ஏற்படுகிறது. இதனால் காப்பகத்துக்குள் செல்லும் சாலைகளை வனத்துறையினர் கண்காணிப்பார்கள்.

குறிப்பாக, கால்நடைகளை மேய்ச்சலுக்கு கொண்டு செல்பவர்கள் கண்காணிக்கப்படுவார்கள். தீத்தடுப்பு காவலர்கள் நியமிக்கப்பட்டு, விதிகளை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். தீத்தடுப்பு கோடுகள் அமைக்கும் பணிகள் விரைவில் தொடங்கப்படும். 6மீட்டர் அகலத்துக்கு சுமார் ஆயிரம் கிலோ மீட்டருக்கு தீத்தடுப்பு கோடுகள் வெட்டப்படும்.

வனத்தீ ஏற்பட்டால் கட்டுப்படுத்த தீயணைப்பு தடுப்பு படையினர் 24 மணி நேரமும் செயல்படுவார்கள். மேலும், வனத்தீ குறித்து வனத்தை ஒட்டியுள்ள கிராமங்களில் வசிப்பவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த கூட்டங்கள் நடத்தப்படும். புலிகளின் நடமாட்டத்தை கண்காணிக்கநிறுவப்பட்ட கேமராக்கள் வனத்தீயை தடுக்கபயன்படுத்தப்படும்.

இவ்வாறு வனத்துறையினர் தெரிவித்தனர்.

# ம.நீ.ம., தலைவர் கமல் பிறந்த நாளில் ரத்த தான முகாம்



மதுரை, நவ.29–

மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் 68வது பிறந்த நாளை முன்னிட்டு அருப்புக்கோட்டை மக்கள் நீதி மய்யம் சார்பாக மாவட்ட பொறுப்பாளர் செல்வக்குமார் தலைமையில் அருப்புக்கோட்டை பாவடி தோப்பு ஆயிரங்கண் மாரியம்மன் கோவில் அருகிலுள்ள கலையரங்கத்தில் சிறப்பு ரத்த தான முகாம் நடைபெற்றது.

முகாமில், ஏராளமான மக்கள் தாமாகவே முன்வந்து ரத்த தானம் வழங்கினர். இந்நிகழ்வில் முன்னாள் மாவட்ட செயலாளர் பாஸ்கரன் மற்றும் மத்திய மாவட்ட நற்பணி இயக்க அணி அமைப்பாளர் நாகராஜன், மகளிர் அணி மண்டல அமைப்பாளர் செல்வி, விருதுநகர் முனியராஜ், திருச்சுழி பொறுப்பாளர் சரவணகுமார், நகர செயலாளர் ராஜாமணி, ஒன்றிய செயலாளர் கிருஷ்ணன், மாவட்ட துணை செயலாளர் பாஸ்கரபாண்டியன், இளைஞர் அணி அமைப்பாளர் பிச்சைமணி, மகளிர் அணி முகேஷ்வரி மற்றும் மக்கள் நீதி மய்யம் நிர்வாகிகள் மற்றும் மக்கள் திரளாக பங்கேற்றனர்.

# இந்தியாவும், இந்து சமயமும் வளர்ச்சி அடைந்தால் உலகில் அமைதி ஏற்படும் சென்னை விழாவில் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ விஜயேந்திரர் அருளுரை!

சென்னை, நவ.29–

விஸ்வ ஹிந்து பரிஷத் அகில உலக முன்னாள் செயல் தலைவர் எஸ். வேதாந்தம் எழுதிய ‘மனதோடுபேசுகிறேன்-ஓர் ஆன்மிக தேசியவாதியின் காலடிச்சுவடுகள்’ என்ற புத்தக வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது.



புத்தகத்தை வெளியிட்டஅல்லயன்ஸ் நிறுவனத்தின் நிவாசன் வரவேற்றார். விழாவில், காஞ்சி காமகோடி பீடாதிபதிஸ்ரீவிஜயேந்திரர் அருளுரை வழங்கி பேசியதாவது:

வேதாந்தம்எழுதியுள்ள மனதோடு பேசுகிறேன் என்ற புத்தகத்தில் தனது கருத்துகளைதெளிவாகவும், நாகரிகமாகவும், உறுதியாகவும் தெரிவித்துள்ளார். பொது வாழ்க்கையில் ஈடுபட விரும்பும்இளைஞர்களுக்கு இது உத்வேகத்தை அளிப்பதோடு, வழிகாட்டியாகவும் அமைந்துள்ளது.

பொதுவாழ்க்கையில் ஈடுபடுபவர்களும், இளைஞர்களும் முக்கியமாக படிக்க வேண்டியது இப்புத்தகம். அல்லயன்ஸ் நிறுவனம் தெய்வ பக்தியையும், தேச பக்தியையும் பரப்பும் நோக்கில் பல்வேறு புத்தகங்களை வெளியிட்டு வருகிறது. அந்தவரிசையில் இந்தப் புத்தகமும் வெளியிடப்பட்டுள்ளது.

வேதாந்தம் இந்து மதத்தை பரப்புவதற்கு பிரச்சாரம் செய்ததோடு, ஓராசிரியர் பள்ளியை உருவாக்கினார். அதேபோல், கிராமப்புற பூசாரிகளின் வாழ்க்கை மேம்படவும்பாடுபட்டார். சமுதாயம் வளரும்போது, சமயத்தையும் வளர்க்க வேண்டும். நல்லோர்களின் இடமாகஇந்தியா உள்ளது. சனாதன தர்மமும், இந்து சமயமும் வளர்ச்சி பெற வேண்டும். இதற்கு பல சிந்தனைகளை வளர்க்க வேண்டும். இந்தியாவும், இந்து சமயமும் வளர்ச்சி அடைந்தால் உலகில் அமைதிஏற்படும். இவ்வாறு ஸ்ரீவிஜயேந்திரர் பேசினார்.

விழாவில், வேதாந்தம் ஏற்புரை ஆற்றிபேசுகையில், “நான் செய்தது சாதாரண பணி. 1949ம் ஆண்டு ஆர்.எஸ்.எஸ்., உடன் தொடர்பு ஏற்பட்டது. கடந்த 73 ஆண்டுகளாக ஒரே கொள்கையுடன் உள்ளேன். இந்துமதத்தில்என்னுடைய பணி தொடரும்,” என்றார்.

விழாவில், திருப்புகலூர் வேளாக்குறிச்சி ஆதீனம் திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீலஸ்ரீ சத்தியஞான மகாதேவ தேசிக பரமாச்சார்ய சுவாமிகள், கோவை ஸ்ரீ பரமேஸ்வரி சித்தர் பீடம் காமாட்சிபுரி ஆதீனம்ஞானகுருசாக்தஸ்ரீ சிவலிங்கேசுவரஸ்வாமிகள், கண்ணந்தாங்கல் மங்களபுரி ஷேத்திரம் 108 சக்திபீடத் திருக்கோயில் நிறுவனர் ஸ்ரீலஸ்ரீ காமாட்சி சுவாமிகள் உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர்.

# இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவராகும் “தங்க மங்கை” பி.டி.உஷா!

புதுடெல்லி, நவ.29–

இந்திய ஒலிம்பிக் சங்க நிர்வாகிகள் தேர்தல் டெல்லியில் வருகிற டிசம்பர் 10ம் தேதி நடக்கிறது. இவற்றில், இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் உள்ளிட்ட முக்கிய பதவிகளுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான காலக்கெடு நேற்றுடன் முடிவுக்கு வந்தது.

இந்நிலையில், இந்த தேர்தலில் போட்டியிட உள்ளேன் என இந்தியாவின் தங்கமங்கைஎனபோற்றப்படும் கேரளாவை சேர்ந்த பி.டி. உஷா (வயது 58) கடந்த 26ம் தேதி தனது விருப்பத்தினை வெளியிட்டார். இதுபற்றி அவர் தனது டுவிட்டர் பதிவில், சக வீரர்கள் மற்றும் தேசிய விளையாட்டு சம்மேளனங்களின் ஆதரவை ஏற்று இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் பதவிக்கு போட்டியிட வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளேன் என குறிப்பிட்டார். தலைவர் பதவிக்கு அவரை தவிர, வேறு யாரும் வேட்புமனுத் தாக்கல் செய்யவில்லை.. வேறு எந்த பதவிகளுக்கும் யாரும் நியமனம் செய்யப்படவில்லை என்று இதை தேர்தல் நடத்தும் அதிகாரி உமேஷ் சின்ஹா குறிப்பிட்டுள்ளார்.



இதனால், போட்டியின்றி தலைவர் பதவிக்கு பி.டி. உஷா தேர்வாகும் நிலை உள்ளது.

இச்சூழலில், இந்திய ஒலிம்பிக் சங்க தலைவராக தங்க மங்கை பி.டி.உஷா தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார் என மத்திய சட்ட மற்றும் நீதி துறை அமைச்சர் கிரண் ரிஜிஜூ, தனது டுவிட்டர் வழியே தெரிவித்ததுடன், தனது வாழ்த்துகளையும் பகிர்ந்து கொண்டார். கவுரவமிக்க இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படும் நமது நாட்டின் அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறேன். அவர்களால் நாடு பெருமை அடைகிறது என்று தெரிவித்து உள்ளார்.


இந்த பதவிக்கு தேர்வு செய்யப்பட்ட பி.டி. உஷா முதல் பெண் தலைவராவார். ஆசிய விளையாட்டு போட்டிகளில் 1982 மற்றும் 1994 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் 4 தங்கம் உள்பட 11 பதக்கங்களை அவர் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சென்னையில் கடும்பனியால் விமானங்கள் தாமதம்!

சென்னை, நவ.29–

சென்னையில் கடும் பனிமூட்டம் நிலவியதால் மஸ்கட், குவைத், புனே விமானங்கள் பெங்களூரு, ஹைராபாத்துக்கு திருப்பிவிடப்பட்டன

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்று முன்தினம் காலை கடுமையான பனிமூட்டம் நிலவியது. இதனால், சென்னை விமான நிலையத்தில் விமான சேவைகள் பாதிக்கப்பட்டன.



நேற்று காலை மஸ்கட், குவைத், புனே ஆகிய இடங்களிலிருந்து சென்னைக்கு வந்த விமானங்கள் ஹைதராபாத்பெங்களூரு ஆகிய இடங்களுக்கு திருப்பிவிடப்பட்டன.

ஹைதராபாத், பெங்களூரு, கொல்கத்தா, மும்பை, மலேசியா ஆகிய விமானங்கள் தாமதமாக தரையிறங்கின. இதேபோல், சென்னையில் இருந்து புறப்படும் ஹைதராபாத், விசாகப்பட்டினம், ராஜமுந்திரி, மதுரை, மும்பை உள்ளிட்ட 8 விமானங்கள் சுமார் 30 நிமிட நேரம் தாமதமாக புறப்பட்டுச் சென்றன.

# ஐக்கிய கலாம் அறக்கட்டளை நிர்வாகிகள் – சசிகலா சந்திப்பு

சென்னை, நவ.29–
சர்வதேச ஐக்கிய கலாம் அறக்கட்டளை நிறுவனத் தலைவரும் ஐ.நா., பாதுகாப்பு அமைப்பின் தேசிய இயக்குநருமான செந்தூர் பாண்டியன், சசிகலாவை சென்னையில் அவரது இல்லத்தில் சந்தித்தார். அப்போது சசிகலா, செந்தூர் பாண்டியன் பணிகளுக்கு வாழ்த்து தெரிவித்தார்.



செந்தூர் பாண்டியன் அவரிடம் கூறுகையில், நான் அ.தி.மு.க.,வில் மாணவர் அணியில் இருந்தேன். உண்மையான தொண்டர்கள் அனைவரும் உங்களுடன் ஒன்றுபட வேண்டும். என்னைப் போன்ற ஒன்றரை கோடி தொண்டர்கள் உங்கள் தலைமையில் ஒன்றுபட்டு அ.தி.மு.க., வளர வேண்டும் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில், சர்வதேச ஐக்கிய கலாம் அறக்கட்டளை நிர்வாகிகள் ஜோயல் ஜர்விஸ் மற்றும் ஹரிஷ் உடனிருந்தனர்

# மாற்றுத்திறனாளி பெண்ணுக்கு தையல் இயந்திரம் வழங்கல்

காரைக்கால், நவ.29–
புதுச்சேரி தவளக்குப்பத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி சரோஜா என்பவர் போக்குவரத்து அமைச்சர் சந்திர பிரியங்காவிடம் தனது வாழ்வாதாரத்திற்கு உதவும்படி கோரிக்கை வைத்திருந்தார்.




அதன்பேரில், புதுச்சேரி ரவுண்ட் டேபிள் சார்பில் தையல் இயந்திரம் ஒன்றினை ஏற்பாடு செய்து மாற்றுத்திறனாளி பயனாளி சரோஜாவிற்கு தனது காரைக்கால் சட்டப்பேரவை அலுவலகத்தில் போக்குவரத்து அமைச்சர் சந்திர பிரியங்கா தையல் இயந்திரத்தினை வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, புதுச்சேரி ரவுண்ட் டேபிள் நிர்வாகிகள் வெங்கட்ரமணி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# சீர்காழியில் முன்னறிவிப்பின்றி கடைகளுக்கு சீல்! 100க்கும் மேற்பட்ட கடைகளை அடைத்த வணிகர்கள்

சீர்காழி,நவ.29–
சீர்காழி பழைய பேருந்து நிலையத்தில் நகராட்சிக்குச் சொந்தமான நான்கு கடைகளுக்கு முன்னறிவிப்பு இன்றி சீல் வைத்ததைக் கண்டித்து பழைய பேருந்து நிலையம் பகுதியில் 100க்கும் மேற்பட்ட கடைகளை அடைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி பழைய பேருந்து நிலையம் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான 112 கடைகள் உள்ளன. இந்த கடைகளுக்கு நகராட்சி நிர்வாகம் சார்பில், போதிய பராமரிப்பு வசதிகள் செய்து தரப்படாத காரணத்தால் மழை பெய்யும் பொழுது கட்டிடங்களின் உள்பகுதியில் மழை நீர் கசிகின்றது. மேலும், இந்த கடைகளுக்கு மின்சாரம் வசதி, குடிநீர் வசதி, கழிவறை வசதி உள்ளிட்ட எந்த அடிப்படை வசதியும் செய்து தரப்படவில்லை.

இந்நிலையில், நகராட்சிக்குச் சொந்தமான கடைகளில் வாடகை பாக்கி வைத்திருந்ததாக நான்கு கடைகளுக்கு நகராட்சி அதிகாரிகள் சீல் வைத்தனர். இதைத்தொடர்ந்து எவ்வித முன்னறிவிப்பும் இன்றி சீல் வைத்ததைக் கண்டித்தும், அடிப்படை வசதிகள் செய்து தர வலியுறுத்தியும் பழைய பேருந்து நிலைய வர்த்தகர் சங்கம் சார்பில், ஒரு நாள் கடையடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையெட்டி பழைய பேருந்து நிலைய பகுதியில் 100க்கும் மேற்பட்ட கடைகள் மூடப்பட்டு வெறிச்சோடிக் காணப்பட்டது.

# நீர்பாசன சங்க தலைவர் தேர்தலில் வெற்றி பெற்ற அ.தி.மு.க.,வினர் விஜயபாஸ்கரிடம் ஆசிபெற்றனர்





*அன்னவாசல், நவ.29–*
*நீர்பாசனசங்கதலைவர் தேர்தலில் வெற்றி பெற்ற அ.தி.மு.க., நிர்வாகிகள் முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கரை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.*

*புதுக்கோட்டை மாவட்டத்தில் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள நீர் பாசன குளங்களை விவசாயத்திற்கு பயன்படுத்துவோருக்கான நீர்பாசனதலைவர்தேர்தல் சமீபத்தில் நடைபெற்றது.*

*இந்த தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி, ஆவுடையார்கோவில் ஒன்றியங்களை சேர்ந்த அ.தி.மு.க., நிர்வாகிகள் முன்னாள் அமைச்சரும், மாவட்ட செயலாளருமான விஜயபாஸ்கரை சந்தித்து வாழ்த்து பெற்றனர்*

*ஆவுடையார்கோவில் ஒன்றியத்தைச் சேர்ந்த பெருநாவலூர் பெரிய ஏரி வளையான்ஓடைநீர்பாசன தலைவராக வீர சேகரன் (எ) சிவா, குண்டகவயல் ஊத்தானிக்காடு கன்மாய் நீர்பாசனசங்கதலைவராக உமா புஸ்பராஜ். கறம்பக்குடி ஒன்றியம் கருக்காங்குறிச்சிகீழத்தெரு நெடுவுடையான் குளம் நீர்பாசனசங்கதலைவராக தேவராஜ், தெற்கு தெரு ஊராட்சி புங்கன் குளம் நீர்பாசன சங்க தலைவராகபிரசாத்பாலு, தேர்தல் மூலம் தங்களை எதிர்த்து போட்டியிட்ட தி.மு.க., அ.ம.மு.க., உள்ளிட்ட எதிர்கட்சி வேட்பாளர்களை விட அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற்றனர்.*

*வெற்றி பெற்ற அ.தி.மு.க., நிர்வாகிகள் முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கரை சந்தித்து வெற்றி சன்றிதழை காண்பித்து வாழ்த்து பெற்றனர். அப்போது முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் வெற்றி பெற்ற நீர் பாசன தலைவர்களுக்கு பொன்னாடை போர்த்தி இனிப்புகள் வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.*

*இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் சுப்ரமணியன், ஊராட்சி மன்றதலைவர் குபேந்திரன் உள்ளிட்ட ஏராளமான அ.தி.மு.க.,வினர் கலந்து கொண்டனர்.*

# உளுந்தூர்பேட்டை அருகே கார்த்திகை பஞ்சமி தீர்த்த நீராடல் உற்சவ விழா

கள்ளக்குறிச்சி, நவ.29–
கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், ம.குன்னத்தூர் கிராமத்தில் அலமேலு மங்கை சமேத ஸ்ரீனிவாசபெருமாள் ஆலய 22ம் ஆண்டு கார்த்திகை பஞ்சமி தீர்த்த நீராடல் உற்சவ விழா சிறப்பாக நடைபெற்றது.



கார்த்திகை மாதத்தில் பஞ்சமி திதி அன்று ஆந்திர மாநிலத்தில் உள்ள மிகவும் பிரசித்தி பெற்ற திருப்பதி கோவிலில் பஞ்சமி திதி நீராடல் நிகழ்ச்சி வெகு விமரிசையாக நடைபெறும்,

இதற்கு அடுத்தபடியாக இக்கிராமத்தில் ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதத்தில் இவ்விழா மிகவும் சிறப்பாக நடைபெறும். அந்த வகையில் ஸ்ரீஅலமேலு மங்கை சமேத, ஸ்ரீனிவாசப் பெருமாள் புஷ்ப அலங்காரத்துடன் வீதி உலா விழா நடைபெற்றது. இதைத் தொடர்ந்து நேற்று காலை ஸ்ரீ சக்கரத்தாழ்வார், திருக்கோவிலில் இருந்து பஜனை பாடல்களுடன் ஊர்வலமாக புறப்பட்டு மெயின் ரோட்டிற்கு வலது புறம் அமைந்துள்ள ஸ்ரீ அய்யனார் குளத்தில் தீர்த்தவாரி உற்சவத்தில் ஸ்ரீ சக்கரத்தாழ்வார் புனித நீராடல் வைபவம் நடைபெற்றது.

விழாவில் இப்பகுதியிலுள்ள 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் மற்றும் பக்தர்கள் கலந்துகொண்டு குளத்தில் புனித நீராடினர். விழாவில் ஏராளமானோர் மொட்டையடித்து நேர்த்திக்கடன் செலுத்தினர். 15 குழந்தைகள் (துலாபாரம்) எடைக்கு எடை பணம் செலுத்தினர். மேலும் இவ்விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளில் நடுக்கடலில் கேக் வெட்டிய எம்.எல்.ஏ.,



சென்னை, நவ.29–
உதயநிதி ஸ்டானின் பிறந்த நாளை முன்னிட்டு மாதவரம் எம்.எல்.ஏ., சுதர்சனம் விசைப்படகில் நடுக்கடலில் கேக் கொண்டாடியது கட்சியினரிடையே பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது.

திருவொற்றியூர் தி.மு.க., மேற்கு பகுதி செயலாளர் அருள் தாஸ் தலைமையில் வடசென்னை கிழக்கு மாவட்ட செயலாளரும், மாதவரம் எம்.எல்.ஏ., சுதர்சனம் காசிமேடு பகுதியில் விசைப்படகில் கடலுக்குச் சென்று கடல் நடுவே தி.மு.க., தொண்டர்களுடன் கேக் வெட்டி உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை கொண்டாடினார்.

நிகழ்ச்சியில், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் தியாகராஜன், பகுதி துனை செயலாளர் குறளரசன், வழக்கறிஞர் ஹரிகரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தி.மு.க.,வினர் விதம்விதமாக உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை கொண்டாடி வரும் நிலையில், தி.மு.க., எம்.எல்.ஏ., நடுக்கடலில் விசைப்படகில் கேக் வெட்டியது கட்சியினரிடையே வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

# உதயநிதி பிறந்த நாள் விழாவில் குழந்தைகளுக்கு உணவு வழங்கல்



சீர்காழி, நவ,.29–
உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு சீர்காழி தென்பாதியில் உள்ள அன்பாலயத்தில் தி.மு.க., இளைஞரணி நிர்வாகிகள் கேக் வெட்டி 90 குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கி கொண்டாடினார்.

இதற்கான ஏற்பாடுகளை சீர்காழி நகர தி.மு.க., இளைஞரணி நிர்வாகி தன்ராஜ் செய்திருந்தார். இந்நிகழ்ச்சியில் சீர்காழி தி.மு.க., நகர செயலாளர் சுப்புராயன் தலைமை வகித்தார்.

குழந்தைகளுக்கு மதிய உணவுவழங்கும்நிகழ்ச்சியில், நகர பொருளாளர்கள் கோடங்குடி சங்கர், துரை மற்றும் மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் திருச்செல்வம், மாவட்ட கலை இலக்கிய பேரவை துணைத் அமைப்பாளர் செல்வ முத்துக்குமார் உள்ளிட்ட தி.மு.க., நகர நிர்வாகிகள் உட்பட கட்சியினர் பலர் கலந்து கொண்டனர்.



▶ **வேலூர் மாவட்டம், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையின் நூற்றாண்டு விழா முன்னிட்டு வேலூர் கோட்டையிலிருந்து மருத்துவர்கள், மருத்துவ மாணவ, மாணவிகள், சுகாதாரத்துறை ஊழியர்கள், பொதுமக்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்ட மாரத்தான் ஓட்டத்தை ஆட்சியர் குமாரவேல் பாண்டியன் கொடியசைத்து துவக்கி வைத்தார். துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) பானுமதி, மாவட்ட பயிற்சி மருத்துவ அலுவலர் நிவேதிதா, மாவட்ட நலக்கல்வியாளர் நீதிபதிராஜன் ஆகியோர் மாரத்தான் ஓட்டத்தில் பங்கேற்றனர்.**

# காவலர் பணிகளுக்கான எழுத்துத் தேர்வு வேலூர் எஸ்.பி., நேரில் ஆய்வு செய்தார்



வேலூர், நவ.29–
வேலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணையம் நடத்தும் இரண்டாம் நிலைக் காவலர், தீயணைப்பாளர் மற்றும் சிறைக்காவலர் பணியிடங்களுக்கான எழுத்துத் தேர்வு தமிழகம் முழுவதும் நடைபெற்றது.

இதில், வேலூர் மாவட்ட காவல் எல்லைக்குட்பட்ட கல்லூரிகள் மற்றும் பள்ளிகள் என 15 தேர்வு மையங்களில் நடைபெற்றது. வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ராஜேஷ்கண்ணன் எழுத்துத் தேர்வு நடைபெற்ற மையங்களுக்கு சென்று, பாதுகாப்பு பணிகள் மற்றும் எழுத்துத்தேர்வு அறைகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

காவல் அதிகாரிகளுக்கு பாதுகாப்பு அறிவுரைகள் வழங்கி கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டு அமைதியான முறையில் தேர்வு நடைபெறுவதை உறுதி செய்தார்.

வேலூர் மாவட்டத்தில் நடைபெற்ற காவலர் தேர்வில் 12 ஆயிரத்து, 577 பேர் பங்கேற்றனர். 2,414 பேர் தேர்வில் பங்கேற்கவில்லை.

# தூய்மைப் பணியாளர்கள் உள்ளிருப்புப் போராட்டம் புதுகை நகராட்சி முழுவதும் குப்பைகள் தேக்கம்

புதுக்கோட்டை, நவ.29–
அவுட்சோர்சிங் முறையில் வேலைக்கு ஆட்களை எடுக்கக்கூடாதுஎனவலியுறுத்தி புதுக்கோட்டை நகராட்சி தூய்மைப் பணியாளர்கள் நேற்றுஉள்ளிருப்புப்பேராட்டம் நடத்தினர்.



போராட்டத்திற்கு புதுக்கோட்டை மாவட்ட உள்ளாட்சித்துறைதொழிலாளர் சங்கப் பொதுச் செயலாளர் முகமதலிஜின்னா தலைமை வகித்தார். கோரிக்கைகளை வலியுறுத்திசிஐ.டியு.,மாவட்டச் செயலாளர் ஸ்ரீதர், பொருளாளர் பாலசுப்பிரமணியன், துணைத் தலைவர்கள்அன்புமணவாளன், மாரிக்கண்ணு மற்றும் நிர்வாகிகள் யாசிந்த், முத்தையா, மாணிக்கம், ரெங்கசாமி உள்ளிட்டோர் பேசினர். போராட்டத்தில் ஏராளமான தூய்மைப்பணித் தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டத்தில், நகராட்சி, மாநகராட்சிகளில் அவுட்சோர்சிங் முறையில் ஆட்களை எடுக்கக்கூடாது. அரசாணை 152ஐ ரத்து செய்ய வேண்டும். ஒப்பந்த தூய்மை பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்த தின கூலி ரூ.449 வழங்க வேண்டும். நிரந்தர ஊழியர்களுக்கு வருங்கால வைப்பு நிதியில் இருந்து கடன் வழங்க வேண்டும்.

மாத சம்பளத்தை ஊழியர்களுக்கு 5ம் தேதிக்குள் வழங்க வேண்டும். இறந்த தொழிலாளிகளுக்கான வாரிசு வேலை வழங்க வேண்டும். மழைகோட், கையுறை, கூட்டுமாறு உள்பட பாதுகாப்பு உபகரணங்களை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தூய்மைப்பணித் தொழிலாளர்கள் உள்ளிருப்பு போராட்டம் காரணமாக நேற்று புதுகை நகராட்சி முழுவதும் குப்பைகள் அள்ளப்படாமல் மலைபோல் தேங்கி துர்நாற்றம் வீசியது.

# அரிமளம் மெர்க்குரி பள்ளியில் மாறுவேடப்போட்டி





அரிமளம், நவ.29–
அரிமளம் மெர்க்குரி பள்ளி மாணவ, மாணவியருக்கான மாறுவேடப்போட்டி நடைபெற்றது.

போட்டியில், மாணவர்கள் முருகன், கிருஷ்ணன், நாரதர், ராதை, ஆண்டாள், அம்மன் உள்ளிட்ட கடவுள் வேடங்களும், நேரு, காந்தி, நேதாஜி, பாரதியார், விவேகானந்தர், அப்துல்கலாம் உள்ளிட்ட தேசதலைவர்கள் வேடங்களும், இந்திய வரலாற்றை நினைவு கூறும் வகையில் வீரபாண்டிய கட்டபொம்மன், ஜான்சிராணி, வீரமங்கை வேலு நாச்சியார் போன்றும், இன்றைய சமுதாய பணிகளை சேவைகளாக செய்துவரும் ஆசிரியர், போலீஸ், ராணுவ வீரர்கள், விவசாயி போலவும் பல்வேறு வேடமிட்டு நடித்து காண்பித்து அசத்தினர்.

போட்டி நடுவர்களாக அறந்தாங்கி ஸ்போக்கன் இங்கிலிஷ் ஆசிரியர் பிரபாகரன் மற்றும் ஸ்போக்கன் ஹிந்தி ஆசிரியர் தர்மராஜ் வெற்றி பெற்ற மாணவர்களை தேர்ந்தெடுத்தனர். போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நினைவு பரிசு வழங்கப்பட்டது.

முன்னதாக பள்ளி முதல்வர் முத்துலெட்சுமி அனைவரையும் வரவேற்றார். பள்ளி தாளாளர் ரமணன் நன்றி கூறினார். விழா ஏற்பாடுகளை பள்ளி ஆசிரியர்கள் செய்திருந்தனர்.

# டிச., 28ல் ஆளுநர் மாளிகை முற்றுகை போராட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் பங்கேற்க முடிவு

ஆவுடையார்கோவில், நவ.29–
புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோவிலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றிய குழு கூட்டம் நேற்று நடைபெற்றது.



கூட்டத்திற்கு கட்சியின் ஒன்றிய செயலாளர் காமாட்சி தலைமை தாங்கினார். சி.பி.ஐ., மாவட்ட செயலாளர் செங்கோடன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். கூட்டத்தில், ஒருமனதாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, பா.ஜ., கட்சியின் கொள்கையை தாங்கி தமிழக அரசு திட்டங்களுக்கு எதிரே நிற்பதால் அவரை திரும்ப பெற வேண்டும் என்பதை வலியுறுத்தி டிசம்பர் 28ம் தேதி ஆளுநர் மாளிகை முற்றுகை போராட்டம் நடத்துவதால் அதில் கட்சியினர் கலந்து கொள்வது.

வரும் 2023ம் ஆண்டுக்கான உறுப்பினர் பதிவு நடத்தி முடிப்பது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி துவக்க நாளான 1925ம் ஆண்டு டிசம்பர் 26ஐ போற்றும் வகையில் டிசம்பர் 26ம் நாளில் கட்சி கிளைகள் அனைத்திலும் கொடியேற்றுவது.

ஆவுடையார் கோவில் சுற்றுலாத்தலமாக விளங்குவதால் ஆத்மநாதர் கோவில் எதிரே உள்ள நெல்லியடி குளத்தை சுத்தம் செய்ய வேண்டும். அரசு கலைக்கல்லூரிக்கு சுற்றுச்சுவர் மற்றும் கழிவறைகள் அமைத்து தர வேண்டும். ஒக்கூர் உயர்நிலைப்பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைக்கப்பட வேண்டும் உட்பட 10க்கும் மேற்பட்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில், மாவட்ட துணைச் செயலாளர் ராஜேந்திரன் உட்பட 20க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# மணமேல்குடியில் மாற்றுத்திறனாளிக்கான சிறப்பு முகாம்

ஆவுடையார்கோவில், நவ.29–
புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு முகாம் நடைபெற்றது.



தமிழக அரசின் சார்பில் மாவட்டத்தில் ஒன்றியம் வாரியாக மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, அவர்களுக்குத் தேவையான உதவி உபகரணங்கள் மற்றும் மாதம் ரூ.2,000 உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் மணமேல்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிக்கான சிறப்பு முகாமில் ஒன்றியக்குழுத் தலைவரும், தி.மு.க., மாநில தேர்தல் பணிக்குழு செயலாளருமான பரணிகார்த்திகேயன் கலந்து கொண்டு மாற்றுத்திறனாளிகளுக்கான உதவி உபகரணங்களை வழங்கினார்.

முகாமில், மருத்துவர்கள் பரிசோதனைக்குப் பிறகு மாற்றுத்திறனாளிகளுக்கு வீல்சேர், கைத்தாங்கி, செவித்திறன் இயந்திரம் உள்ளிட்ட உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டது. இதில் மணமேல்குடி ஒன்றியத்திற்குட்பட்ட 350க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் பயனடைந்தனர்.

முகாமில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் உலகநாதன், மனநல மருத்துவர் சுந்தரமூர்த்தி, மருத்துவர்கள் விஜய் ஆனந்த், சூலைத்கான், அனைத்து மாற்றுத்திறனாளிகள் நல சங்க தலைவர் தங்கவேல், தொண்டு நிறுவன பணியாளர்கள் உள்ளிட்ட மக்கள், பயனாளிகள் கலந்து கொண்டனர்.




▶ **வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, கிங்ஸ்டன் பள்ளியில் நடைபெற்ற கண் பரிசோதனை முகாமை மாவட்ட ஆட்சியர் குமாரவேல் பாண்டியன் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார். கிங்ஸ்டன் நிறுவனங்களின் தலைவர் சங்கீதா கதிர்ஆனந்த், பள்ளி முதல்வர் சொர்ணலதா, கிங்ஸ்டன் மெட்ரிக்குலேஷன் பள்ளி முதல்வர் ஜான் மெர்லின் இன்பகுமார், உதவி முதல்வர் பவானி மற்றும் சாரணர் இயக்க மாநில தலைமை ஆணையர் மஹபூப் பாஷா மற்றும் பள்ளி அலுவலர்கள் உடனிருந்தனர்.**

# புதுகை ஐ.எம்.ஏ., - எஸ்.ஆர்.எம்., மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சார்பில் மருத்துவக் கருத்தரங்கு




புதுக்கோட்டை, நவ.29-
புதுக்கோட்டை கிளை இந்திய மருத்துவ சங்கம் மற்றும் திருச்சி எஸ்.ஆர்.எம்., மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இணைந்து நடத்திய தொடர் மருத்துவ கருத்தரங்கு புதுக்கோட்டை இந்திய மருத்துவ சங்கக் கூட்ட அரங்கத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு இந்திய மருத்துவ சங்கம் புதுக்கோட்டை கிளை தலைவர் சுவாமிநாதன் தலைமை வகித்தார். அனைவரையும் கிளைச்செயலாளர் முகமது சுல்தான் வரவேற்றார். எஸ்.ஆர்.எம்., மருத்துவ கல்லூரி மருத்துவமனை இருதயநல சிறப்பு மருத்துவர் சதீஷ்குமார் இருதய அடைப்பு உருவாகும் விதம் மற்றும் கண்டறியும் விதம், குணப்படுத்தும் வழிமுறைகளை திரை மூலம் விளக்கமளித்தார்.

தொடர்ந்து குழந்தைகள் சிறப்பு மருத்துவர் சந்திரபாபு பேசுகையில் குழந்தைகள் தவறுதலாக உட்கொள்வதால் சுவாச மண்டலம் மற்றும் உணவுக்குழாயில் அடைப்பு ஏற்படும் போது அதை கண்டறிந்து அடைப்பைசரிசெய்வதன் முக்கியத்துவத்தை திரை மூலம் விளக்கினார்.

தமிழ்நாடு மெடிக்கல் கவுன்சில் சலீம், மூத்த மருத்துவர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். நிறைவாக இந்திய மருத்துவசங்கம் புதுக்கோட்டை கிளைநிதி செயலாளர் கோபாலகிருஷ்ணன் நன்றி கூறினார்.




# சபரிமலைக்கு டூவீலரில் செல்ல ஐயப்ப பக்தர்களுக்கு தடை



திருவனந்தபுரம், நவ.29-
சபரிமலை ஐயப்பன் கோவிலில் மண்டல பூஜைக்காக நடை திறக்கப்பட்டு தினமும் சிறப்பு வழிபாடு நடந்து வருகிறது. இதில் பங்கேற்க வரும்பக்தர்களின் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதே சமயத்தில் ஐயப்ப பக்தர்களின் பாதுகாப்புதொடர்பாகசில கட்டுப்பாடுகளை கேரள அரசு அறிவித்துள்ளது.

இந்நிலையில் கேரள மோட்டார் வாகனத்துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

சபரிமலைக்கு தரிசனத்திற்கு வரும் ஐயப்ப பக்தர்கள் பொது போக்குவரத்து, வாடகை அல்லது சொந்த வாகனங்களை பயன்படுத்த வேண்டும். ஆட்டோ, சரக்கு வாகனங்களை பயன்படுத்தி சபரிமலை பயணம் மேற்கொள்ளக் கூடாது. அதேபோல், மோட்டார்சைக்கிள்களிலும் பம்பைக்குசெல்லக்கூடாது. இதுபோன்ற பயணங்களை தவிர்க்க வேண்டும். தூக்கமின்மை அல்லது சோர்வுடன்பக்தர்கள்பயணம் செய்வது ஆபத்தானது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# நோயாளிகள், கர்ப்பிணிகளுக்கு அறிகுறி இருந்தால் மட்டுமே கொரோனா பரிசோதனை: பொது சுகாதாரத் துறை அறிவிப்பு





சென்னை, நவ.29-
''நோயாளிகள், கர்ப்பிணிகள் உள்ளிட்டோருக்கு கூட அறிகுறிகள் இருந்தால் மட்டும் கொரோனா பரிசோதனை செய்தால் போதும். அறிகுறிகள் இல்லாவிட்டால் கொரோனா பரிசோதனை அவசியம் இல்லை," என்று தமிழக பொது சுகாதாரம், நோய் தடுப்பு மருந்து துறை (டிபிஎச்) இயக்குநர் செல்வவிநாயகம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக புதிய வழிகாட்டுதல்களை வெளியிட்டு, சுகாதார சேவையின் அனைத்து துணை இயக்குநர்கள், மாநகராட்சிகள், நகராட்சிகளின் சுகாதார அலுவலர்களுக்கு அவர் அனுப்பியுள்ள சுற்றறிக்கை விபரம் வருமாறு:

மத்திய அரசு அறிவுறுத்தலின்படி, கொரோனா பரிசோதனைகள் குறித்த புதிய வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, காய்ச்சல், இருமல், தொண்டை வலி, மூச்சு விடுவதில் சிரமம், சுவாசக் கோளாறுகள், வாசனை, சுவை இழப்பு உள்ளவர்களுக்கு மட்டும் இனி கொரோனா பரிசோதனை செய்தால் போதும்.

மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் அனைத்து நோயாளிகளுக்கும் கொரோனா பரிசோதனை (ஆர்டி-பிசிஆர்) தேவை இல்லை. குறிப்பாக, அறுவைசிகிச்சைதேவைப்படும் நோயாளிகள், கர்ப்பிணிகள் உள்ளிட்டோருக்கு கூட அறிகுறிகள் இருந்தால் மட்டும் கொரோனா பரிசோதனை செய்தால் போதும். அறிகுறிகள் இல்லாவிட்டால் கொரோனா பரிசோதனை அவசியம் இல்லை.

அதே நேரம், வெளிநாடுகளில் இருந்து தமிழகம் வரும் அனைவரும் கட்டாயம் கொரோனா தடுப்பூசி போட்டிருக்க வேண்டும். வெளிநாட்டு விமானங்களில் வருபவர்களில் தோராயமாக 2 சதவீதம் பேருக்கு பரிசோதனை செய்யும் நடைமுறையும் தற்போது கைவிடப்படுகிறது. இவ்வாறு அவர் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# உயிரியல் இடுபொருள், உற்பத்தி தொழில்நுட்பம் திருவேங்கைவாசலில் 40 விவசாயிகளுக்கு பயிற்சி





அன்னவாசல், நவ.29-
அன்னவாசல் வட்டாரம் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) 2022-23ம் ஆண்டு மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் அன்னவாசல்வட்டார 40 விவசாயிகளுக்கு திருவேங்கைவாசல் கிராமத்தில் உயிரியல் இடுபொருட்கள் உற்பத்தி தொழில்நுட்பங்கள் பற்றிய விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு வட்டார தொழில்நுட்ப குழு அமைப்பாளர் வேளாண்மை உதவி இயக்குநர் பழனியப்பா தலைமை வகித்தார்., குடுமியான்மலை வேளாண்மை அலுவலர் குழந்தைவேலு உயிரியல் இடுபொருட்கள் என்றால் என்ன? அதன் சிறப்பியல்புகள், உயிரியல் இடுபொருட்கள் உற்பத்தி செய்யும் முறைகள், திட மற்றும் திரவ உயிர் உரங்களான அசோஸ் பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, அசிட்டோ பாக்டர் உற்பத்தி செய்யும் முறைகள் மற்றும் பயன்பாடு, பசுந்தாள் மற்றும் பசுந்தழை உரங்கள் பயன்பாடு பற்றி விளக்கி கூறினார்.

இயற்கை உரங்கள் மற்றும் இயற்கை இடுபொருட்களான பஞ்சகாவியா, ஜீவாமிர்தம், அமிர்த கரைசல், மண்புழு உரம், மீன் அமிலம், மூலிகை பூச்சி விரட்டி போன்றவை தயாரிப்பது பற்றியும் எடுத்துக் கூறினார். பயிற்சியில் வேளாண் விரிவாக்கமையத்திலுள்ள திட்டங்கள், இடுபொருட்கள் மற்றும் உழவன் செயலியின் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டது.

பயிற்சி முடிவில் பயன்படுத்தியது போக மீதமுள்ள உயிர் உரங்களை காலாவதியாகும் முன் வீட்டிலுள்ள குப்பை கூலங்களில் இட்டு உயிர் உரங்களிலுள்ள உயிரிகளை பல்லுயிர் பெருக்கம்செய்து எவ்வாறு பயன்படுத்தலாம் என்று செயல்விளக்கம் மூலம் செய்து காட்டி விளக்கினார்.

முன்னதாக உதவி தொழில்நுட்ப மேலாளர் தேவி வரவேற்றுபேசினார். பயிற்சி ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் நவாப்ராஜா செய்திருந்தார்.



புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் அருலுள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில், மாவீரர் தினத்தை முன்னிட்டு ஈழத்தமிழர்களான மாவீரர்கள் படத்திற்கு கணேசன் தலைமையில் மலர் மாலை அணிவித்து, மெழுகுவர்த்தி ஏற்றி வைத்து அஞ்சலி செலுத்தினர்.

# சென்னையில் உதயநிதி ஸ்டாலினுக்கு தங்கச்செயின் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வழங்கினார்



தென்காசி, நவ.29-
தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க., சார்பில் மாவட்ட செயலாளர் சிவ பத்மநாதன், இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் எம்.எல்.ஏ.,வுக்கு 45வது பிறந்த நாளை முன்னிட்டு 45 கிராம் எடை உள்ள தங்கச்செயினை சென்னையில் வழங்கினார்.

மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு கட்சியினர் ஏராளமானோர் வாழ்த்துக்களை தெரிவித்தனர். தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க., சார்பில் மாவட்ட செயலாளர் சிவ பத்மநாதன் தலைமையில் சென்னைக்கு நேரில் சென்று வாழ்த்து தெரிவித்து 45 கிராம் எடையுள்ள தங்கச் செயினை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் சுந்தரமகாலிங்கம், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆறுமுகச்சாமி, மாவட்ட பொருளாளர் ஷெரீப், பொதுக்குழு உறுப்பினர் சீவ நல்லூர் சாமித்துரை, ஒன்றிய செயலாளர் சீனித்துரை, ரவிசங்கர், உதயநிதி ஸ்டாலின் நற்பணி மன்ற மாவட்ட துணைச் செயலாளர் சிவ அருணன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# சொக்கம்பட்டியில் போதை விழிப்புணர்வு பேரணி




தென்காசி, நவ.29-
தென்காசி மாவட்டம் சொக்கம்பட்டியில் என்.எஸ்.எஸ்., சிறப்பு முகாம், போதைப்பொருள் ஒழிப்பு, நெகிழி ஒழிப்பு, விழிப்புணர்வு ஊர்வலம், சிந்தாமணி புளியங்குடி கண்ணா மகளிர் மேல்நிலைப்பள்ளி என்.எஸ்.எஸ்., சிறப்பு முகாம் கடந்த 24ம் தேதி முதல் நாளை 30ம் தேதி வரை சொக்கம்பட்டி கிராமத்தில் 7 நாட்கள் நடைபெற்று வருகிறது.

தினமும் சிறப்பு நிகழ்ச்சிகள் உழவாரப்பணி, விழிப்புணர்வு ஊர்வலம், மருத்துவ முகாம், சட்ட விழிப்புணர்வு போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. போதை விழிப்புணர்வு பேரணியில் சொக்கம்பட்டி பஞ்சாயத்து தலைவர் பச்சமால், துணைத் தலைவர் செல்வகுமார் தலைமையில் நடைபெற்றது.

இதற்கான ஏற்பாடுகளை பள்ளிச்செயலர் சுபாஷ் கண்ணா, தலைமை ஆசிரியை டெய்சி எலிசபெத் ராணி, திட்ட அலுவலர்கள் ரேவதி, ஆறுமுகம், மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம், கிரீன் சர்க்கிள் பகுதியிலுள்ள கழிவுநீர் கால்வாயில் அடிக்கடி அடைப்பு ஏற்பட்டதையடுத்து அதை சீர் செய்யும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் குமாரவேல் பாண்டியன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாநகராட்சி ஆணையர் அசோக்குமார், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# பி.எம்.கிஸான் திட்டத்தில் பயன்பெறும் விவசாயிகளுக்கு புதுக்கோட்டை வேளாண் இணை இயக்குநர் அட்வைஸ்



புதுக்கோட்டை, நவ.29-
புதுக்கோட்டை மாவட்டத்தில் பி.எம்.கிஸான் திட்டத்தில் தொடர்ந்து தவணைகள் பெறுவதற்கு இ-கேஒய்சி-யின் அவசியம் குறித்து புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் பெரியசாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

பி.எம்.கிஸான் திட்டத்தில் விவசாயிகள் தங்களுக்குத் தேவையான வேளாண் இடுபொருட்களை கொள்முதல் செய்வதற்கு மத்திய அரசானது ஒரு விவசாய குடும்பத்திற்கு ரூ.2,000 வீதம் ஆண்டுக்கு மூன்று தவணைகளாக ரூ.6,000 வழங்கி வருகிறது.

இதுவரை இந்த திட்டத்தில் பதிவு செய்த விவசாயிகளுக்கு 12 தவணைகள் வரப்பெற்றுள்ளது. 13வது தவணை பெறுவதற்கு தங்களது ஆதார் விவரங்களைக் கொண்டு நவம்பர் 30ம் தேதிக்குள் இ-கேஒய்சி செய்துகொள்வது அவசியமாகிறது. மேலும், தங்களது வங்கிக் கணக்கு எண்ணுடன் ஆதார் எண்ணை இணைத்துக்கொள்ள வேண்டும்.

இ-கேஒய்சி ஏற்கனவே ஆதார் எண்ணுடன் செல்போன் எண்ணை இணைத்துள்ள விவசாயிகள், தங்களது ஆதார் எண் விவரங்களை அருகிலுள்ள பொது சேவை மையம் அல்லது தபால் அலுவலகத்தின் தபால் சேவை மூலம் பி.எம்.கிஸான் திட்ட வலைதளத்தில் உள்ளீடு செய்ய வேண்டும்.

இனிவரும் தவணை தொகைகள் அனைத்தும் ஆதார் எண் அடிப்படையில் வழங்கப்படும். எனவே, பயனாளிகள் அனைவரும் தங்களது வங்கிக்கணக்கு உள்ள வங்கி கிளையை அணுகி வங்கி கணக்கு எண்ணுடன் ஆதார் எண்ணை இணைத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




# 21 வயதுக்கு உட்பட்டோருக்கு மதுபானம் விற்பதை தடுப்பது எப்படி? : அரசு பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு

மதுரை, நவ.29-
தமிழகத்தில் 21 வயதுக்கு உட்பட்டோருக்கு மதுபானம் விற்பனை செய்வதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? என்பது குறித்து தமிழக அரசு தெரிவிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் டாஸ்மாக் மதுபான விற்னை நேரத்தை மதியம் 2 மணி முதல் இரவு 8 மணி வரை என மாற்றியமைக்கவும், 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு மதுபானம் விற்க தடை விதிக்கக்கோரி திருச்செந்தூரைச் சேர்ந்த ராம்குமார் ஆதித்தன், உயர் நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனு நீதிபதிகள் ஆர்.மகாதேவன், ஜெ.சத்ய நாராயண பிரசாத் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அரசு வழக்கறிஞர் வாதிடுகையில், ''தென் மாநிலங்களில் தமிழகத்தில் தான் குறைந்த நேரம் டாஸ்மாக் மதுபான கடை திறக்கப்படுகிறது,'' என்றார். அதற்கு நீதிபதிகள், ''டாஸ்மாக் கடைகள் குறைந்த நேரம் திறக்கப்பட்டாலும் மது விற்பனையில் பிற மாநிலங்களை விட தமிழகம் முன்னிலையில் உள்ளது," என்றனர்.

அதற்கு அரசு வழக்கறிஞர், "மதுபானங்களின் விலை அதிகமாக இருப்பதால் அதிகளவில் விற்பனை நடைபெறுவது போல் தெரிகிறது,'' என்றார். பின்னர் நீதிபதிகள், "டாஸ்மாக் மது விற்பனை நேரத்தை பிற்பகல் 2 முதல் இரவு 8 மணி வரை என மாற்றியமைக்க ஏன் பரிசீலனை செய்யக்கூடாது?" என கேள்வி எழுப்பினர்.


அதற்கு அரசு வழக்கறிஞர், "கொரோனா காலத்தில்பிறமாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு மது வாங்கி வருவது உள்ளிட்ட பல்வேறு சட்டவிரோத செயல்கள் நடைபெற்றதாக ஆயிரக்கணக்கான வழக்குகள் பதிவாகியுள்ளன. மதுப்பிரியர்கள் மாற்று வழிகளை யோசிக்கின்றனர். 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு மதுபானம் விற்பனையை தடுக்க பல்வேறு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது," என்றார்.

உடனே நீதிபதிகள், ''மாணவர்களுக்கு மதுபானம் விற்பனை செய்யப்படுவதில்லையா?" என கேள்வி எழுப்பினர். அரசு வழக்கறிஞர், "இந்த விஷயத்தை அரசு தீவிரமாக கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது," என்றார்.

இதையடுத்து, 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு மதுபானம் விற்பதை தடுக்க அரசு எடுக்கும் நடவடிக்கைகள் மற்றும் அரசுக்கு வந்துள்ள பரிந்துரைகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை டிசம்பர் 1-க்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

# அருவருக்கத்தக்க கருத்தை கூறிய பாபா ராம்தேவ் அனைத்து பெண்களிடமும் மன்னிப்பு கோர வேண்டும்

## டெல்லி மகளிர் ஆணைய தலைவர் ஆவேசம்!



புதுடெல்லி, நவ.29-
"பெண்கள் ஆடை பற்றி அருவருக்கத்தக்க கருத்தை கூறிய பாபா ராம்தேவ் நாட்டிலுள்ள அனைத்து பெண்களிடமும் மன்னிப்பு கோர வேண்டும்," என டெல்லி மகளிர் ஆணையத் தலைவர் ஸ்வாதி மாலிவால் வலியுறுத்தியுள்ளார்.

கடந்தவெள்ளிக்கிழமை மகாராஷ்டிராவில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. அந்த விழாவுக்கு மகாராஷ்டிரா துணை முதல்வரின் மனைவி அம்ருதா ஃபட்நவிஸ். முதல்வர் ஏக்நாத் ஷிண்டேவின் மகன் ஸ்ரீகாந்த் ஷிண்டே ஆகியோர் வந்திருந்தனர்.

அப்போது பாபா ராம்தேவ் பேசியதாவது: கூட்டத்திற்கு வருகை தந்துள்ள பெண்கள் அனைவரும் மகிழ்ச்சியாகக் காணப்படுகிறீர்கள். உங்களுக்கு எல்லா நன்மையும் சேரட்டும். சேலை அணிந்து வந்தவர்களுக்கு முதல் வரிசையில் அமர வாய்ப்பு கிடைத்துள்ளது. சிலர் சல்வாரில் வந்துள்ளீர்கள். சிலர் வீடுகளில் இருந்து சேலை கொண்டுவந்தும் கூட மாற்ற நேரமில்லாததால் சல்வாரில் இருக்கிறீர்கள். நீங்கள் சேலை அணிந்திருந்தாலும் அழகு. அம்ருதாவை போல் சல்வார் அணிந்திருந்தாலும் அழகு. இல்லை என்னைப் போல் ஏதும் அணியாமல் இருந்தாலும் கூட அழகுதான்," என்றார்.

அவருடைய இந்தப் பேச்சைக் கேட்டு கூட்டத்திலிருந்த பெண்கள் தங்களை ஒருவருக்கொருவர் பார்த்துக் கொள்ளும் காட்சி வீடியோவில் இடம்பெற்றுள்ளது. இது மட்டுமல்லாமல் அந்த வீடியோவில், ராம்தேவ் "சமூக கோட்பாடுகளுக்காகத் தான் ஆடை அணிகிறோம். 10 வயது வரை நாம் ஏதும் அணியாமல் சுற்றியிருக்கிறோம் தானே. இந்தக் கால குழந்தைகள் தான் ஐந்தடுக்கில் ஆடை அணிகின்றனர்," என்று பேசியதும் பதிவாகியிருக்கிறது.

இதுகுறித்து டெல்லி மகளிர் ஆணைய தலைவர் ஸ்வாதி மாலிவால், "ஸ்வாமிராம்தேவ், துணை முதல்வர் மனைவியின் முன்னால் பெண்களை இழிவாகப் பேசியது கண்டனத்துக்குரியது. வீடியோவைக் காணும் அவர் கருத்தால் அனைத்து பெண்களும் வேதனையடைந்தது தெரிகிறது. அவர் நாட்டுப் பெண்கள் அனைவரிடமும் மன்னிப்புகோரவேண்டும்," என்று கோரியுள்ளார்.

திரிணாமூல் எம்.பி., மஹுவா மொய்த்ரா, "டெல்லி ராம்லீலா மைதானத்திலிருந்து பதஞ்சலி பாபா ஏன் பெண்கள் ஆடையணிந்து ஓடினார் என்பது புரிந்துவிட்டது. அவருக்கு சேலையும், சல்வாரும் தான் இஷ்டமென்று சொல்லியிருக்கிறார். அவருக்கு பார்வைக் கோளாறு இருக்கிறது. அதனால் அவரது கருத்துக்கள் இப்படி இருக்கின்றன," என்று விமர்சித்துள்ளார்.

இதேபோல் பல்வேறு பெண்கள் அமைப்புகளிடம்இருந்தும் பாபா ராம்தேவுக்கு எதிராககண்டனகுரல்கள் எழுந்தவண்ணம் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# அரசு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு போட்டித்தேர்வுக்கான பயிற்சி மையம்

ராணிப்பேட்டை, நவ.29-

ராணிப்பேட்டை மாவட்ட பள்ளி கல்வித்துறை சார்பில் அரசு பள்ளி மாணவ, மாணவிகளை உயர் கல்விக்கான போட்டித் தேர்வுகள் மற்றும் திறன் தேர்வுகளுக்கு தயார் செய்யும் வகையில் பயிற்சி மையங்கள் துவக்கி வைக்கப்பட்டது.



இது குறித்து ராணிப்பேட்டை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் உஷா தெரிவித்ததாவது: மருத்துவ படிப்புகளுக்கான நீட் உள்ளிட்ட பல்வேறு படிப்புகளுக்கான நுழைவுத்தேர்வுகளில் அரசு பள்ளி மாணவ, மாணவிகள் முதன்மை பெற இந்த பயிற்சி மையங்கள் உதவும். அரசு பள்ளிகளைச் சேர்ந்த 400 பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கும், 160 பதினோராம் வகுப்பு மாணவர்களுக்கும் போட்டித்தேர்வுக்கு பயிற்சி பெற தேர்வு செய்யப்பட உள்ளனர்.

ஒவ்வொரு மையத்திலும் பிளஸ் டூ வகுப்பில் தலா 50 மாணவர்களும் பிளஸ் ஒன் வகுப்பில் 20 மாணவர்களும் பயிற்சி பெற உள்ளனர். தொடர்ந்து இம்மாவட்டத்தில் 8 மையங்களில் உயர் கல்விக்கான போட்டித் தேர்வுகள் மற்றும் திறன் தேர்வு பயிற்சி வழங்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.




திருநெல்வேலியில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கட்டுப்பாட்டில் இயங்கும் கல்லூரிகளுக்கான பழுதூக்கும் போட்டி நடைபெற்றது. போட்டியில் புளியங்குடி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை கல்லூரி கணினி அறிவியல் துறை 3ம் ஆண்டு மாணவர் கார்த்திக் 3ம் இடம் பெற்றுள்ளார். மாணவருக்கு கல்லூரியின் முதல்வர் கண்ணன் மற்றும் உடற்கல்வி இயக்குனர் குமரேசன், சீனிவாசன், பேராசிரியர்கள், கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர்கள் சார்பாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

# இலுப்பூரில் 9ம் ஆண்டு யோகா போட்டிகள் மாணவர்களுக்கு விஜயபாஸ்கர் பரிசு வழங்கல்

இலுப்பூர், நவ.29-

புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூரில் பஞ்சபூதா சர்வதேச தற்காப்பு கலைக்கழகம் சார்பில் நடைபெற்ற ஒன்பதாம் ஆண்டு மாநில அளவிலான யோகா போட்டிகளை முன்னாள் அமைச்சரும் சட்டமன்ற உறுப்பினருமான விஜயபாஸ்கர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார்.

இலுப்பூரில் உள்ள மதர்தெரசா பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற 9ம் ஆண்டு யோகா போட்டிகள் காலையில் தொடங்கி மாலை வரை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சுமார் 400க்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



சிறப்பு விருந்தினராக முன்னாள் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் மற்றும் கல்லூரி நிறுவனர் சின்னத்தம்பி, தாளாளர் உதயகுமார், பொறியியல் கல்லூரி முதல்வர் ராஜேஸ்வரன், உடற்கல்வி கல்லூரி முதல்வர் ஞானவேல், பள்ளி முதல்வர் கவிதா, தலைமை பயிற்சியாளர் மாஸ்டர் சதீஷ்குமார், பயிற்சியாளர் ராஜ்குமார் கலந்துகொண்டு பாராட்டி சான்றிதழ்களை வழங்கினர்.

ஒட்டுமொத்த சாம்பியன்ஸ் பட்டத்தை துவரங்குறிச்சி டி.எம்.ஐ, குளோபல் பள்ளி பெற்றுள்ளது அவர்களுக்கான சாம்பியன்ஷிப் பதக்கத்தை முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் வழங்கினார்

# திருநாவலூரில் பா.ஜ., சக்தி கேந்திரா நிர்வாகிகள் ஆய்வு கூட்டம்






கள்ளக்குறிச்சி, நவ.29-

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், திருநாவலூரில்உள்ளதனியார் திருமண மண்டபத்தில் உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதி பா.ஜ., சக்தி கேந்திரா நிர்வாகிகள் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் அருள் தலைமை தாங்கினார். மாவட்ட பொதுச்செயலாளர் முருகன் ஏற்பாடு செய்திருந்தார். மாவட்ட துணை தலைவர் கஜேந்திரன் முன்னிலை வகித்தார். கிழக்கு ஒன்றிய தலைவர் சிங்காரவேலு வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக மாநில பொதுச் செயலாளர் மீனாட்சிவித்யாசுந்தர் கலந்து கொண்டு பேசுகையில், அனைவரும் திறம்பட செயலாற்ற வேண்டும். அறிவு சார்ந்த செயல்பாடுகளை மக்களிடத்தில் கொண்டு சேர்க்க வேண்டும். வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் நாம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கருத்துக்களை வழங்கினார்.

கூட்டத்தில் உளுந்தூர்பேட்டை நகர தலைவர் காந்தி, கிழக்கு ஒன்றியதலைவர் இளையராஜா, திருவெண்ணைநல்லூர் தெற்கு ஒன்றிய தலைவர் சரவணன் மற்றும்மாநில, மாவட்ட, ஒன்றிய சக்தி கேந்திரா நிர்வாகிகள் 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இறுதியாக மேற்கு ஒன்றிய தலைவர் வீரபாண்டியன் நன்றி கூறினார்.

# தென்காசியில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



தென்காசி, நவ.29-

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நேற்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகாஷ் பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில், இலவச வீட்டு மனை பட்டா, முதியோர் உதவித்தொகை, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தர கோருதல், பட்டா மாறுதல், மாற்றுத் திறனாளிகள் உதவித்தொகை, மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 570 மனுக்கள் பெறப்பட்டன. கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களாக உள்ளதா? என்பதை விசாரணை செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சியர் ஆகாஷ் அறிவுறுத்தினார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயினுலாப்தீன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் முத்துமாதவன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் கந்தசாமி, உதவி ஆணையர் ராஜ மனோகரன், மாவட்ட வழங்கல் அலுவலர் சுதா மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# சுங்கச்சாவடி ஊழியர்களுக்கு ஆதரவு தெரிவித்து உளுந்தூரில் அ.தி.மு.க., கண்டன ஆர்ப்பாட்டம்





கள்ளக்குறிச்சி, நவ.29-

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அருகே சென்னை - திருச்சி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் செங்குறிச்சி கிராமப் பகுதியில் அமைந்துள்ள சுங்கச்சாவடி, மற்றும் திருமாந்துறை சுங்கச்சாவடி கடந்த 2009ம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இந்த சுங்கச்சாவடியில் கடந்த 10 ஆண்டுக்கு மேலாக 100க்கும் மேற்பட்டோர் பல்வேறு நிலைகளில் பணிபுரிந்து வருகின்றனர். இந்நிலையில் பாஸ்ட் ட்ரேக் என்னும் நவீன முறை அறிமுகப்படுத்தப்பட்டு, சுங்கக்கட்டணம் வசூல் செய்கின்றனர்.

இந்நிலையில் ஆட்கள் குறைப்பதற்காக நிர்வாகம் எடுத்த நடவடிக்கையால், 10 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து வந்த 56 ஊழியர்களை பணி நீக்கம் செய்து சுங்கச்சாவடி நிர்வாகம் திடீரென அறிவித்தது. கடந்த அக்டோபர் 1ம் தேதியில் இருந்து தொடர்ந்து நேற்று 59வது நாளாக பல்வேறு வகைகளில் தங்களது எதிர்ப்புகளை தெரிவிக்கும் வகையில் உள்ளிருப்பு போராட்டத்தில் ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களின் போராட்டத்திற்கு பல்வேறு அமைப்புகளை சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். ஆனால், சுங்கச்சாவடி நிர்வாகம் மற்றும் மத்திய, மாநில அரசுகள் இதுவரை இவர்களின் போராட்டத்தைப் பற்றி கவலைப்படாமல் இருக்கிறது.

இந்நிலையில், நேற்று கள்ளக்குறிச்சி மாவட்ட அ.தி.மு.க., மாவட்ட செயலாளர் குமரகுரு தலைமையில், முன்னாள் அமைச்சர் மோகன், கள்ளக்குறிச்சி எம்.எல்.ஏ., செந்தில்குமார் முன்னிலையில், உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலகம் முன் சுங்கச்சாவடி ஊழியர்களுக்கு ஆதரவாக, மீண்டும் அவர்களை பணியில் அமர்த்த வேண்டி, மாநில மற்றும் மாவட்ட நிர்வாகங்களை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில், மாவட்ட மாணவரணி செயலாளர் பாக்யராஜ், ஒன்றிய செயலாளர்கள் மணிராஜ், செண்பகவேல், முன்னாள் ஒன்றிய குழு துணை தலைவர் சாய்ராம், நகர துணை செயலாளர் கோபால், தகவல் தொழில்நுட்ப பிரிவு சாய்அருண், வழக்கறிஞர் அணி திலீப், கிருஷ்ணன் மற்றும் நிர்வாகிகள் முருகன், கோபால் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்று பணி நீக்கம் செய்யப்பட்ட சுங்கச்சாவடி ஊழியர்களை பணியில் அமர்த்த வேண்டி கோஷங்கள் எழுப்பினர்.

# மேலூரில் தீ விபத்து, பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி

அன்னவாசல், நவ.29-

அன்னவாசல் அருகே உள்ள மேலூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் தீ விபத்து மற்றும் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

நிகழ்ச்சிக்கு இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் குழந்தைசாமி தலைமை தாங்கினார். சமூக ஆர்வலர் மேலூர் மனோகரன் முன்னிலை வகித்தார். இதில், சிப்காட் தீயணைப்பு நிலைய அலுவலர் சின்னகண்ணு உள்ளிட்ட தீயணைப்பு துறை வீரர்கள் கலந்து கொண்டு பள்ளி மாணவ, மாணவிகள், மக்களுக்கு தீவிபத்து



உள்ளிட்ட ஆபத்துகளில் இருந்து தங்களை தற்காத்துக் கொள்வது எப்படி? என்பது குறித்து செயல் விளக்க முறை செய்து காண்பித்தனர். பின்னர் விபத்து ஏற்பட்டால் அடிபட்டவர்களை எப்படி தூக்கிச் செல்வது?,எரிந்துகொண்டிருக்கும் தீயை எவ்வாறு அணைப்பது? நீரில் மூழ்கியவரை எவ்வாறு காப்பாற்றுவது? உள்ளிட்ட செயல் விளக்கம் செய்து காண்பித்தனர்.

இந்நிகழ்ச்சியில் வட்டாட்சியர், ஆசிரியர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் நூற்றுக்கணக்கான பள்ளி மாணவ, மாணவிகள், மக்கள் செயல் விளக்கத்தைக் கண்டு பயனடைந்தனர்.



திடக்கழிவு மேலாண்மை மற்றும் மக்கும், மக்காத குப்பை என தனித்தனியாக பிரித்து எடுக்கக்கூடிய துப்புரவு பணியாளர்களை பாராட்டும் விதமாக புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் பேரூராட்சி 10வது வார்டில் குப்பைகள் வாங்கும் இடத்திற்கு சென்ற அன்னவாசல் முன்னாள் பேரூராட்சி தலைவரும் 10வது வார்டு தி.மு.க., கவுன்சிலர் பிரபா, துப்புரவு பணியார்களை கௌரவிக்கும் விதமாக அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி பாராட்டினார்.

# அக்கச்சிப்பட்டியில் வானவில் மன்றம் தொடக்க விழா

கந்தர்வகோட்டை, நவ.29-

அக்கசிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் வானவில் மன்றம் தொடங்கப்பட்டது.

நிகழ்விற்கு தலைமை ஆசிரியர் தமிழ்ச்செல்வி தலைமை வகித்தார். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ரகமதுல்லா வரவேற்றார். ஊராட்சி மன்ற துணைத் தலைவி மலர்கொடி, பள்ளி மேலாண்மை குழு தலைவி இலக்கியா, துணைத் தலைவி வேதநாயகி, வார்டு உறுப்பினர் கலா ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட மருத்துவர் சுவாமிநாதன் வானவில் மன்ற மாணவர்களுக்கு அறிவியல்,



கணிதம் அறிவை செய்முறை மூலம் படிப்பதற்கு சிறப்பான திட்டம் என்று பேசினார். கணித பட்டதாரி ஆசிரியர் மணிமேகலை கணக்குப் புதிர்கள், வட்டத்தின் சுற்றளவு, பரப்பளவு ஆகியவற்றை செய்முறைமூலம் விளக்கினார். முன்னதாக ஆங்கில பட்டதாரி ஆசிரியர் ஆனந்த்ராஜ் தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில், ஆசிரியர்கள் நிவின், செல்விஜாய் ஆகியோர் கலந்துகொண்டனர். நிறைவாக இடைநிலை ஆசிரியர் வெள்ளைச்சாமி நன்றிகூறினார்.

இதே போன்று கந்தர்வகோட்டைஊராட்சிஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் விஜய லெட்சுமி தலைமையில்வானவில்மன்றம் தொடங்கப்பட்டது.



தி.மு.க., இளைஞரணி செயலாளரும், சேப்பாக்கம் திருவல்லிக்கேணி எம்.எல்.ஏ.,வுமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா சென்னையில் கொண்டாடப்பட்டது. அவருக்கு மயிலாடுதுறை மாவட்ட செயலாளரும், பூம்புகார் தொகுதி எம்.எல்.ஏ.,வுமான நிவேதா முருகன் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

# தந்தை வீட்டுக்கு வந்த 6 மாத கர்ப்பிணி பாம்பு கடித்து சாவு: ஆர்.டி.ஓ., விசாரணை

அன்னவாசல், நவ.29-

புதுக்கோட்டை மாவட்டம் கொத்தக்கோட்டை பகுதியைச் சேர்ந்தவர் சாமிநாதன். இவரது மனைவி ராதிகா (25). இவர்களுக்கு திருமணமாகி 5 ஆண்டுகள் ஆகிறது. இவர்களுக்கு 3 வயதில் ஒரு குழந்தை உள்ளதாக கூறப்படுகிறது. இந்நிலையில் 6 மாத கர்ப்பிணியாக இருந்த ராதிகா அன்னவாசல் அருகே உள்ள நல்லம்மாள்சத்திரத்தில் இருக்கும் தந்தை வீட்டுக்கு வந்துள்ளார்.

அப்போது, வீட்டிற்கு பின்புறம் உள்ள கொள்ளை பகுதிக்கு சென்றபோது அவரை பாம்பு கடித்ததாக கூறப்படுகிறது இதனையடுத்து சிறிதுநேரத்தில்மயங்கிவிழுந்த ராதிகாவை உறவினர்கள் மீட்டு சிகிச்சைக்காக அன்னவாசல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர். பின்னர் ராதிகாவின் உடல் பிரோத பரிசோதனைக்காக புதுக்கோட்டை அரசு மருத்தவகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதுகுறித்து அன்னவாசல்போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ராதிகாவிற்கு திருமணமாகி 5 வருடங்களே ஆவதால் இதுகுறித்து இலுப்பூர் ஆர்.டி.ஓ., குழந்தைசாமி விசாரணை நடத்தி வருகிறார்.

# தரமான விதை உற்பத்தி விராலிமலை விவசாயிகளுக்கு பயிற்சி

விராலிமலை, நவ.29-

விராலிமலை வட்டாரத்தில் அட்மா மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத்திட்டத்தின்கீழ் தரமான விதை உற்பத்தி குறித்த விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.



விராலிமலை ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையத்தில் நடைபெற்ற இப்பயிற்சியில் விதைச்சான்று மற்றும் அங்கக சான்றளிப்புத்துறை வேளாண்மை உதவி இயக்குநர் ஜெகதீஸ்வரி கலந்து கொண்டு தரமான விதை உற்பத்தியின் நோக்கம் மற்றும் முக்கியத்துவத்தினை விவசாயிகளுக்கு விளக்கியதோடு விதைப்பண்ணை அமைக்க விரும்பும் விவசாயிகள் விதைப்பண்ணை பதிவு செய்யும் முறை. அதை யாரிடம் சென்று பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்த பின் வயல் தேர்வு, விதை நேர்த்தி, பயிர் விலகு தூரம் மற்றும் பயிர் எண்ணிக்கை பராமரித்தல், விதைச்சான்று அலுவலர் ஆய்வு, கலவன் கண்டறிதல், ஒருங்கிணைந்த உர நிர்வாகம், பூச்சிநோய் மேலாண்மை, அறுவடைக்கு பின் விதை சுத்திகரிப்பு செய்து சான்று அட்டை பொறுத்துதல் போன்ற பல்வேறு விதமான தகவல்களை விவசாயிகளுக்கு எடுத்துக்கூறினார்.

இப்பயிற்சிக்கு தலைமையேற்று பேசிய விராலிமலை வேளாண்மை உதவி இயக்குநர் தமிழ்செல்வி, வட்டாரத்தில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்ட செயல்பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துக்கூறினார். அதைத் தொடர்ந்து மீன்வளத்துறை மாவட்ட திட்ட மேலாளர் குயிலி சிவக்குமார், பல்வேறு வகையான மானியத் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். முன்னதாக வட்டார தொழில்நுட்ப மேலாளர் தேவி வரவேற்றார்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி விதை அலுவலர் தங்கவேல்முருகன் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் பாண்டியன் செய்திருந்தனர். வேளாண்மை அலுவலர் ஷீலாராணி நன்றி கூறினார்.

பயிற்சியில், வானதிராயன்பட்டி, தென்னம்பாடி, தேராவூர், மண்டையூர், பொருவாய், மேபூதகுடி, விராலூர் பேராம்பூர், தன்னாங்குடி, ஆலங்குடி, கோமங்களம் வெம்மணி மற்றும் விராலிமலை கிராமத்தை சேர்ந்த விதைப்பண்ணை விவசாயிகள் மற்றும் விதைப்பண்ணை அமைக்க விரும்பும் விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

இவ்வாறு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.



ஈரோடு ஆர்.என்.புதூரில் உள்ள காது கேளாதோர் அரசு உயர்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர் விடுதியில் உள்ள குழந்தைகளுக்கு தமிழக மக்கள் முன்னேற்ற கழகத்தின் நிறுவனர் ஜான்பாண்டியன் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட தலைவர் செல்வராஜ் தலைமையில் மதிய உணவு வழங்கப்பட்டடது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் மயில்துறையன், மாவட்ட மகளிர் அணி தலைவர் காஞ்சனா, செயலாளர் சத்யா, இளைஞரணி செயலாளர் சிவா பாண்டியன், மாநகர செயலாளர் குணசேகரன், ரஞ்சித், அருள், சண்முகம், குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# விவசாய தொழிலாளர்களுக்கு தனித்துறை வேண்டும் புதுக்கோட்டை மாவட்ட மாநாட்டில் வலியுறுத்தல்





கீரனூர், நவ.29-

தமிழக அரசு விவசாயத் தொழிலாளர்களுக்குதனிதுறை ஒதுக்கி நலத்திட்டங்களை அமல்படுத்த வேண்டுமென அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் புதுக்கோட்டை மாவட்ட மாநாடு வலியுறுத்தி உள்ளது.

விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் புதுக்கோட்டை மாவட்ட 9வது மாநாடு கீரனூரில் நடைபெற்றது. மருதப்பா நினைவரங்கில் நடைபெற்ற மாநாட்டுக்கு மாவட்டத் தலைவர் சண்முகன் தலைமை வகித்தார். மணிவேல் கொடியேற்றினார். ஜோதி அஞ்சலி தீர்மானம் வாசித்தார். வரவேற்புக்குழுத் தலைவர் தங்கவேல் வரவேற்றார். மாநாட்டைத் தொடங்கிவைத்து மாநில பொதுச்செயலாளர் அமிர்தலிங்கம் உரையாற்றினார்.

மாவட்டச்செயலாளர் சங்கர், பொருளாளர் சண்முகம் ஆகியோர் அறிக்கைகளை முன்வைத்தனர். மாநாட்டை வாழ்த்தி மாநில செயலாளர் சின்னதுரை, விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் ராமையன், சி.ஐ.டி.யு., மாவட்டச் செயலாளர் ஸ்ரீதர் ஆகியோர் உரையாற்றினர். புதிய நிர்வாகிகளை அறிமுகம் செய்து மாநில செயலாளர் பழநிசாமி நிறைவாக பேசினார்.

மாவட்டத் தலைவராக சங்கர், செயலாளராக சலோமி, பொருளாளராக சண்முகம், துணைத் தலைவர்களாக சண்முகம், மணிவேல், ராசு, சுபி, ராமசாமி, துணைச் செயலாளர்களாக சித்திரைவேல், பெருமாள், சக்திவேல், செந்தமிழ்ச்செல்வன், இளவரசு உள்ளிட்ட 25 பேர் கொண்ட புதிய மாவட்டக்குழு தேர்வு செய்யப்பட்டது.

தமிழக அரசு வீடு இல்லாத அனைவருக்கும் இலவச வீடும், மனைப்பட்டா இல்லாதவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாவும் வழங்க வேண்டும். காவிரி, வைகை, குண்டாறு திட்டத்தை விரைந்து செயல்படுத்துவதோடு புதுக்கோட்டை மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும்.

தமிழக அரசு விவசாயத் தொழிலாளர்களுக்கு தனித்துறை ஒதுக்கி நலத்திட்டங்களை அமல்படுத்த வேண்டும். மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதிட்டத்தில் உள்ள குறைபாடுகளைக் களைய வேண்டும். அவர்களுக்கு வருடத்திற்கு 100 நாள் வேலையும், நிர்ணயிக்கப்பட்ட கூலியை குறைக்காமலும் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# தி.மு.க., இளைஞரணி செயலாளர் உதயநிதி பிறந்தநாளில் பிறந்த குழந்தைகளுக்கு அமைச்சர் ரகுபதி மோதிரம் அணிவிப்பு





அறந்தாங்கி, நவ.29-

தி.மு.க., இளைஞரணி செயலாளர் உதயநிதி பிறந்தநாளை முன்னிட்டு அறந்தாங்கிஅரசுதலைமை மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு மோதிரம் வழங்கும் விழா சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தலைமையில் நடைபெற்றது

தி.மு.க., இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டுபுதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அரசு தலைமை மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மோதிரம் வழங்கும் நிகழ்ச்சி சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில், பிறந்த ஆறு குழந்தைகளுக்கு சட்டத்துறை அமைச்சர் மோதிரம் அணிவித்து இனிப்புகளை வழங்கினார். நிகழ்ச்சியில் தெற்குமாவட்டஇளைஞர் அணி அமைப்பாளர் மணிராஜன், துணை அமைப்பாளர்பாரதிராஜா, பழனியப்பன் மாவட்டத் துணைச்செயலாளர் ஞான.இளங்கோவன் ஒன்றிய செயலாளர்கள் உதயம் சண்முகம், பொன்.கணேசன் நகர செயலாளர் ராஜேந்திரன் தலைமை செயற்குழு உறுப்பினர்கலைமணி,நகர இளைஞரணி அமைப்பாளர் சேக் இஸ்மாயில், துணை அமைப்பாளர் அய்யப்பன் சங்கர் மற்றும்தளபதி அரசு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, பிறந்தநாளை முன்னிட்டு ரத்ததானம்செய்தஇளைஞர் அணி நிர்வாகிகளுக்கு சட்டத்துறை அமைச்சர் பாராட்டுச் சான்றிதழ் வழங்கி கவுரவித்தார்.





புதுக்கோட்டை நகராட்சி துப்புரவு பணியாளர்கள் வேலை நிறுத்தத்தால் புதுக்கோட்டை நகர் முழுவதும் குப்பைகள் மலை போல் குவிந்து ஆங்காங்கே துர்நாற்றம் வீசுகிறது. புதுகை சாந்தநாதர் சுவாமி கோவில் அருகில் மலை போல் குவிந்திருக்கும் குப்பைகள்.





அரியலூர் மாவட்டம்

முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம்




தமிழ்நாடு சட்டபேரவை விதி எண் 110-ன் கீழ் 07.05.2022 அன்று மாண்புமிகு. தமிழக முதலமைச்சர் அவர்களால் அரசு தொடக்கப்பள்ளிகளில் 1 முதல் 5 ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு பள்ளி வேலை நாட்களில் காலை வேளையில் சத்தான சிற்றுண்டி வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தை முதற்கட்டமாக செயல்படுத்திட அரசாணை (நிலை) எண் 43 சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை (ச ந4-1) துறை நாள் 27.07.2022 இல் வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் மதுரை மாவட்டத்தில் 15.09.2022 அன்று முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து 16.09.2022முதல் அரியலூர் மாவட்டத்தில் ஜெயங்கொண்டம் நகராட்சியில் உள்ள மணக்கரை,சின்னவளையம், கீழக்குடியிருப்பு, மலங்கன்குடியிருப்பு, செங்குந்தபுரம், கொம்பேடு, ஜெயங்கொண்டம் (வடக்கு), ஜெயங்கொண்டம் (தெற்கு), ஜெயங்கொண்டம் ஆதிதிராவிடர்நல அரசு தொடக்கப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தின் கீழ்' பள்ளி வேலை நாட்களில் மேலக்குடியிருப்பு நடுநிலைப்பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த சமையல் மையத்தில் சின்னவளையம் நாச்சியாரம்மன் மகளிர் சுய உதவிக்குழுவினரால் காலை உணவு தயாரித்து தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

மாணவ, மாணவியர் மற்றும் பெற்றோர்களிடம் இத்திட்டம் வெகுவாக பாராட்டுப் பெற்றுள்ளது. பள்ளி பயில வரும் ஏழை மாணவ, மாணவியர் இத்திட்டத்தால் காலையில் பசியின்றி வகுப்புக்கு செல்லவும், அவர்களின் ஊட்டச்சத்து மேம்பாடு அடையவும், ஏழை தாய்மார்கள் கவலையின்றி வேலைக்குச் சென்று குடும்ப பொருளாதாரத்தை ஈட்ட வழி வகுக்கவும் 'முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் அரியலூர் மாவட்டத்தில் செவ்வனே செயலாக்கப்பட்டு வருகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்
அரியலூர் மாவட்டம்




அரியலூர் மாவட்டத்தில் 2022 - 2023 ஆம் ஆண்டில் செயல்படுத்திய திட்டங்கள்

**மக்களை தேடி மருத்துவத் திட்டம்**

மக்களை தேடி மருத்துவம் திட்டத்தில் தமிழகத்தில் அரியலூர் மாவட்டம் முதன்மை மாவட்டமாக திகழ்கிறது 7.85.018 பயனாளிகளுக்கு பரிசோதனை செய்யப்பட்டு 28.398 பேருக்கு வீடு தேடி இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய் உள்ள பயனாளிகளுக்கு மருந்து மாத்திரைகள் பெட்டி வழங்கப்பட்டுள்ளது சிறுநீரக நோய் (Dialysis) பாதிக்கப்பட்ட மூன்று நபர்களுக்கு வீடுகளுக்கு சென்று சிகிச்சை வழங்கப்பட்டது.

**கோவிட் 99 தடுப்பூசி நிலவரம்**

மாநிலத்திலேயே முதல் மாவட்டமாக கர்ப்பிணி பெண்கள் எச்ஐவியால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் 100 % தடுப்பூசி செலுத்தப்பட்டது அரியலூர் மாவட்டத்தில் கோவிட் தடுப்பூசி முதல் தவணை 104.16 சதவீதமும் இரண்டு இரண்டாம் தவணை 106.35% முன்னெச்சரிக்கை தவணை 33.70% செலுத்தப்பட்டது.

**டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி**

மாநிலத்தில் இரண்டாம் மாவட்டமாக அரியலூர் மாவட்டம் திகழ்கிறது. 2022-2023 - 5966 கர்ப்பிணி தாய்மார்கள் ரூ.3.61.46.000 பயனடைந்துள்ளனர்.

**ஜனனி சுரக்ஷா யோஜனா (JSY)**

மாநிலத்தில் இரண்டாம் மாவட்டமாக அரியலூர் மாவட்டம் தெரிகிறது 3383 தாய்மார்களுக்கு அரசு மருத்துவமனை மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிரசவித்த தாய்மார்களுக்கு ரூபாய் 11,12,300 நிதி வழங்கப்பட்டது

**கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்**

கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ் ரூபாய் ஒரு லட்சத்து 8.330 நிதியில் 13 முகாம்கள் நடத்தப்பட்டு 12,661 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

**பள்ளி சிறார் நலத்திட்டம் (RBSK)**

379 குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காப்பீடு திட்டத்தின்கீழ் இலவசமாக இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது 110 குழந்தைகளுக்கு அன்னப்பிளவு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

**காய்ச்சல் முகாம்**

17.045 காய்ச்சல் பரிசோதனை (Fever Camp) முகாம்கள் நடத்தப்பட்டு இதுவரை 8.60.934 நபர்கள் பரிசோதிக்கப்பட்டுள்ளனர்.

**கலைஞரின் கண்ணொளி காப்போம் திட்டம்**

2021 - 2022 நிதி ஆண்டில் 2.962 பயனாளிகளுக்கு மூக்கு கண்ணாடி வழங்கப்பட்டது. 317 கண்புரை நோயாளிகளில் 306 பயனாளிகளுக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

பொதுசுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை, அரியலூர் மாவட்டம்.


Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com

# சீர்காழி அருகே எட்டாம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொந்தரவு அளித்த தலைமை ஆசிரியர் கைது

சீர்காழி,நவ,29

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே இயங்கி வரும் அரசு உதவி பெறும் நடுநிலை பள்ளி தலைமை ஆசிரியரும், பள்ளி செயலருமான சாமுவேல் செல்லத்துரை(54).



இப்பள்ளியில் சுமார் 100 மாணவ - மாணவிகள் பயின்று வருகின்றனர். எட்டாம் வகுப்பு படிக்கும் பள்ளி மாணவிகளை, தலைமையாசிரியர் தனது அறைக்கு மாணவிகளை வரவழைத்து அங்குள்ள பீரோ மறைவில் வைத்து மாணவிகளை பாலியல் சீண்டலில் ஈடுப்பட்டுள்ளார்.

இது குறித்து பாதிக்கப்பட்ட மாணவி வீட்டில் சொல்லி அழுதுள்ளார்.உடனடியாக மாணவியின் தாய் அளித்த புகாரை அடுத்து சீர்காழி அனைத்து மகளிர் காவல் துறையினர் சாமுவேல் செல்லத்துறையை கைது செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# சென்னை தண்டையார்பேட்டையில் திருமணமாகி 13 நாட்களில் புது மணப்பெண் தற்கொலை

சென்னை, நவ,29

தண்டையார்பேட்டை தமிழர் நகர் பகுதியைச் பிரகாஷ் இவருடைய மனைவி கௌரி இவர்களுக்கு ரேகா (35)என்ற மகள் உள்ளார் இவர் சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் ஆய்வக உதவியாளராக பணியாற்றி வந்தார்



இந்நிலையில் சென்னை தி. நகரில் கிரியப்பா சாலையை சேர்ந்த ராஜசேகர் (40)வெல்டிங் கடை நடத்தி வருகிறார் இவருக்கும் ,ரேகாவுக்கும் பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்டு கடந்த 14 ஆம் தேதி அன்று வடபழனி முருகன் கோவிலில் திருமணம் நடைபெற்றது

இந்நிலையில் கடந்த 19 ஆம் தேதி அன்று வயிற்று வலி காரணமாக சிகிச்சைக்காக கணவர் வீட்டில் இருந்து ரேகா தண்டையார் பேட்டையில் உள்ள தாய் வீட்டிற்கு வந்துள்ளார் பின்னர்தாய்வீட்டிலிருந்து தினமும் அரசு ராஜீவ் காந்தி மருத்துவமனைக்கு பணிக்கு சென்று வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று காலை தன்னுடைய மனைவி வீட்டிற்கு அழைத்து செல்வதாக கணவர் ராஜசேகர் மாமியார் கௌரிடம் கூறியுள்ளார் ரேகாவின் தாய் கௌரி சமைப்பதற்கு கடைக்கு சென்று கறி வாங்கிவிட்டு வீட்டுக்கு வந்தபோது மகள் ரேகா மின்விசிறியில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டு இருப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்தார்.

இதுகுறித்து ஆர்கே நகர் போலீசாருக்கு தகவல் கொடுத்தனர் அதன் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து சம்பவ இடத்திற்கு வந்து ரேகாவின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு ஸ்டாலின் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் ரேகாவின் இல்லற வாழ்க்கை பிடிக்காததால் மன உளைச்சல் ஏற்பட்டு தற்கொலை செய்து கொண்டு இருக்கலாம்? அல்லது வேறு எதும் காரணமா? என போலீசார் விசாரணை செய்து வருகின்றனர்.

மேலும் ஆர்கே நகர் போலீசார் ,ஆர்டிஓ விசாரணைக்கு மாற்றம் செய்தனர் திருமணம் ஆகி 13 நாளில் பெண் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் தண்டையார்பேட்டை பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

### தாமரைப்பாக்கம் ஊராட்சியில்

# சுடுகாடு ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும் என எல்லாபுரம் ஒன்றிய குழு கூட்டத்தில் வாக்குவாதம்





ஊத்துக்கோட்டை, நவ29-

திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையத்தில் உள்ள எல்லாபுரம் ஒன்றிய அலுவலக கூட்ட அரங்கத்தில் ஒன்றிய குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு,ஒன்றிய பெருந்தலைவர் வடமதுரை கே.ரமேஷ் தலைமை தாங்கினார். துணை பெருந்தலைவர் வக்கீல் கே.சுரேஷ்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், ஸ்டான்லி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், ஒன்றிய குழு உறுப்பினர்கள் குழந்தைவேலு, திருமலை,சரவணன்,ரவி சிவாஜி ஆகியோர் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பேசியதால் வாக்குவாதம் ஏற்பட்டது. இதில்,அம்மணம்பாக்கம் தாங்கல் ஏரியில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும் என மூன்று ஆண்டுகளாக கோரிக்கை வைத்தும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.இதனால் அந்த ஏரி தற்போது காணாமல் போய்விட்டது. தற்போது தாமரைப்பாக்கம் ஊராட்சியில் உள்ள சுடுகாட்டு நிலத்தில் சிலர் ஆக்கிரமிப்பு செய்து வருகின்றனர்.

எனவே, போர்க்கால அடிப்படையில் சுடுகாட்டு ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும்.மனிதர்களை கடைசியாக கொண்டு சென்று புதைக்கும் இடத்தை பொதுமக்களின் நலன் கருதி மீட்டு தர வேண்டும் என கூறியதால் கூட்டத்தில் வாக்குவாதம் ஏற்பட்டது. மேலும், ஆவடியில் இருந்து மாளந்தூர் வரை செல்லும் மாநகரப் பேருந்தை ஏனம்பாக்கம், ஆவாஜிப்பேட்டை வழிதடத்தில் இயக்க வேண்டும், அத்தங்கிகாவனூர் ஊராட்சியில் கட்டி முடிக்கப்பட்ட அங்கன்வாடி மையத்தை உடனடியாக திறக்க வேண்டும்,ஏ.ஜி.எம்.டி பணியை விரைவாக முடிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்,கம்பெனி ஒன்றுக்கு அப்ரூவல் வழங்க ரூ.35 லட்சம் ஊழல் நடைபெற்றதாக மாவட்ட கலெக்டர் மற்றும் உயர் அதிகாரிகளிடம் புகார் மனு அளித்தோம்.

அந்த பிரச்சனை குறித்து அடுத்த கூட்டத்தில் விளக்கம் அளிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் குறித்து விவாதிக்கப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.ஒன்றிய குழு உறுப்பினர்களின் கோரிக்கையை 60 நாட்களில் நிறைவேற்றி தருவதாக வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உறுதி கூறினர். முடிவில்,வட்டார வளர்ச்சி அலுவலக மேலாளர் சுபதாஸ் நன்றி கூறினார்.



சென்னை தலைமைச் செயலகத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி தலைமையில், தொழில்நுட்பக் கல்வித்துறை கட்டுமானப் பிரிவு கலைக் கல்லூரி, பாலிடெக்னிக் மற்றும் பல்கலைக்கழகங்களில் நடைபெறும் கட்டுமானப் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் உயர்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் தா.கார்த்திகேயன், தொழில்நுட்பக் கல்வி ஆணையர் க.லட்சுமி பிரியா, கட்டுமானப் பிரிவு பொறியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# புதுச்சேரியில் விரைவில் மாணவர்களுக்கு இலவச பேருந்து

## அமைச்சர் நமச்சிவாயம் அறிவிப்பு

புதுச்சேரி, நவ,29

பாண்டிச்சேரியில் நடந்த பத்திரிகை யாலர் சந்திப்பில் புதுச்சேரி உள்துறை அமைச்சர் நமச்சிவாயம்கூறியதாவது, கல்வித் துறை சார்பில் மாணவர்களுக்கான அனைத்து வசதிகளையும் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம். கடந்த காலங்களில் ஒரு ரூபாய்க்கு இயக்கப்பட்ட மாணவர் சிறப்பு பேருந்து இலவச பேருந்தாக மாற்றப்பட்டுள்ளது.



ஒரு வாரத்தில் இந்த பேருந்துகள் இயக்கப்படும். முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி பொய்யான குற்றச்சாட்டுகளை அரசு மீது தொடர்ந்து கூறி வருகிறார். கடந்த ஆட்சியில் கல்வித் துறையில் என்ன செய்தார்கள் என மனசாட்சியோடு நாராயணசாமி,முன்னாள் கல்வி அமைச்சர் கமலக்கண்ணன் நினைத்து பார்க்க வேண்டும். இதை அவர்களின் மனசாட்சிக்கு விட்டு விடுகிறேன்.

முதல்வர் ரங்கசாமி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு என்னென்ன திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம் என்பதை மக்கள் அறிவார்கள். கடந்த காலத்தில் மாணவர்களுக்கு சீருடை வழங்கப்படவில்லை தற்போது சீருடை வழங்க டெண்டர் கூறியுள்ளோம். மதிய உணவில் ஒரு வாரத்தில் முட்டை சேர்க்கப்படும்.

# திமுக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு திமுக நிர்வாகிகள் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி

மயிலாடுதுறை, நவ- 29;

திமுக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு மயிலாடுதுறை மாவட்டம் உளுத்துகுப்பை ஊராட்சியில் இலவச கண் பரிசோதனை மற்றும் பொது மருத்துவ முகாம் ஊராட்சி மன்ற தலைவர் ராஜகுமார் ஏற்பாட்டில் டி எல் சி பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.





இதில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும் மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் கலந்து கொண்டு முகாமை துவக்கி வைத்து பேசினார்.

மயிலாடுதுறை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருந்து மருத்துவர்கள் ரகுராம், பிரவீன், பார்த்தசாரதி, வட்டார மருத்துவ அலுவலர் ஹரிகிருஷ்ணன் செவிலியர்கள் கொண்ட மருத்துவ குழுவினர் 100-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டு மருத்துவ பரிசோதனை செய்து மருந்து மாத்திரைகள் இலவசமாக வழங்கினர். மருத்துவ பரிசோதனை செய்து கொண்டு மருந்து மாத்திரைவாங்கிக்கொண்ட பொதுமக்கள் திமுக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்துக்களைதெரிவித்துக் கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து உதயநிதி பிறந்தநாளை முன்னிட்டு கலைஞர் வாரசந்தையை பூம்புகார் எம்எல்ஏ திறந்து வைத்தார். வல்லாளகரம் ஊராட்சியில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டு பேனா உள்ளிட்ட உபகரணங்கள், பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கினார். நிகழ்ச்சிகளில் ஒன்றிய செயலாளர்கள் ஞான. இமயநாதன்,, எம்.அப்துல் மாலிக், மாவட்ட திமுக துணை செயலாளர் செல்வமணி, தலைமை பொதுக்குழு உறுப்பினர் சிவதாஸ், மயிலாடுதுறை ஒன்றிய குழு உறுப்பினர் மோகன், மற்றும் ஒன்றிய நகர பேரூர் திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# சோழவரம், சின்னமேடு, மாதாவரம், பஞ்செட்டிவழுதிகையில் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா கொண்டாட்டம்

சோழவரம்,நவ.29-

தி.மு.க., இளைஞர் அணி செயலாளரும், சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், சோழவரம் வடக்கு ஒன்றியத்தில் தொடர் நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

சோழவரம் வடக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட 162 கிளைகளிலும் கட்சிக்கொடி ஏற்றி இனிப்புவழங்குதல் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இதில், சின்னம்பேடு ஊராட்சியில் கபடி போட்டி தொடக்க விழா நடைபெற்றது. ஒன்றிய கவுன்சிலர் மற்றும் சோழவரம் வடக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் சந்திரசேகர் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த போட்டியை, ஒன்றிய செயலாளர் வழுதிகை செல்வசேகரன் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வின்போது, ஊராட்சி மன்ற தலைவர் ஜான்சி ராணி ராஜா, துணைத் தலைவர் சேகர், ஒன்றிய அவைத் தலைவர் ரமேஷ் உள்ளிட்ட ஏராளமானோர் உடனிருந்தனர்.தொடர்ந்து, பஞ்செட்டி ஊராட்சி, தச்சூர் கூட்டுச்சாலையில், கட்சிக் கொடியேற்றி, இனிப்பு வழங்கி 500க்கும் அதிகமானோருக்கு வழுதிகை செல்வசேகரன் மதிய உணவு வழங்கினார்.





ஒன்றிய கவுன்சிலர் ரவி மற்றும் கலைவாணன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், ஊராட்சி செயலாளர் செபாஸ்டின் உடனிருந்தார். பின்னர், மாதவரம் ஊராட்சியில் சுரேஷ் ஏற்பாட்டில் 200 நபர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியின் நிறைவாக, மாதவரம் ஊராட்சிக்கு உட்பட்ட வேலம்மாள் நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கட்சி கொடியேற்றி இனிப்புவழங்கப்பட்டது. பின்னர், துப்புரவு பணியாளர்களுக்கு தலா 25 கிலோ அரிசி மற்றும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் சிக்கன் பிரியாணி வழங்கப்பட்டது. கிளைச் செயலாளர் மாதவரம் பாண்டியன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், தி.மு.க., ஐ.டி.,விங் மணிகண்டன், ஒன்றிய மாணவர் அணியைச் சேர்ந்தகதிரவன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

அனைத்து நிகழ்ச்சிகளிலும், ஒன்றிய செயலாளர் வழுதிகை செல்வசேகரன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

புதுகை
வரலாறு
நாளிதழ்

நிறுவனத்தில் பணிபுரிய
செய்தியாளர்கள் தேவை
நாளிதழ் மற்றும் தொலைக்காட்சிகளில் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை
தமிழகம் முழுவதும் மாவட்டம் மற்றும் தாலுகாக்கள் வாரியாக
பணியாற்றிட செய்தியாளர்கள் & புகைப்படக்காரர்கள் தேவை.
தபால் மூலமாக மட்டும் விண்ணப்பிக்கவும்.
தபால் அனுப்பவேண்டிய முகவரி :
TS.No.1103, பெரியார் நகர், இராஜகோபாலபுரம், புதுக்கோட்டை - 3. செல் : 98420 98534



திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை பரப்பு துணைச் செயலாளராக நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் ஆரணி வெ.அன்புவாணன் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் டி.ஜே.கோவிந்தராஜனை சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்து பெற்றார்.அருகில்,ஆரணி பேரூர் திமுக முன்னாள் செயலாளர்கள் டி.கண்ணதாசன்,ஜி. பி.வெங்கடேசன்,ஆரணி பேரூர் துணைச்செயலாளர்கள் வக்கீல் டி.கோபி,த. நிலவழகன், மாவட்ட கவுன்சிலர் ராமஜெயம்,கா.சு.தன்சிங், பொன்னேரி நகராட்சி 1-வது வார்டு செயலாளர் ஜீவராஜ் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் உள்ளனர்.




தமிழக வாழ்வுரிமை கட்சியின் சார்பில் தஞ்சாவூர் திலகர் திடலில் மாவீரர் நாள் நினைவேந்தல் மாநாடு நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இராணிப்பேட்டை நகர செயலாளர் குட்டி (எ) கிருஷ்ணமூர்த்தி மற்றும் இராணிப்பேட்டை நகர மகளிரணி தலைவர் கே.பிரபாவதி தலைமையில் 30க்கும் மேற்பட்ட நிர்வாக உறுப்பினர்கள் தஞ்சாவூரில் கலந்து கொண்டனர். மாநாட்டில் தமிழக வாழ்வுரிமை கட்சியின் நிறுவனத் தலைவரும், பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினருமான தி.வேல்முருகன் சிறப்புரையாற்றினார்



## அரசு பள்ளிகளில் வானவில் மன்றம் முதல்வர் ஸ்டாலின் துவக்கி வைத்தார்

## மாணவர்களுக்கு மது விற்பனை அரசு அறிக்கை தேவை: ஐகோர்ட்





## இந்திய ஒலிம்பிக் சங்கத்தலைவர் பி.டி.உஷாவுக்கு மணிமகுடம்!


சென்னை / புதுக்கோட்டை | 29.11.2022 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

என். எஸ். கிருஷ்ணன் , தமிழகத் திரைப்பட நகைச்சுவை நடிகர் (பி.1908) (இ.1957)



திலீபன் , தமிழீழ விடுதலைப் புலிப் போராளி (பி.1963) (இ.1987)



ஆ. வேலுப்பிள்ளை , ஈழத்துத் தமிழறிஞர், பேராசிரியர் (பி.1936) (இ.2015)



ரம்யா , இந்திய நடிகை, அரசியல்வாதி (பி.1982)



## இன்றைய நினைவு நாள்

எஸ். சிவநாயகம் , இலங்கை ஊடகவியலாளர் (பி.1930) (இ.2010)



எம். ஏ. அப்துல் மஜீத் , இலங்கை அரசியல்வாதி (பி.1926) (இ.2011)



## பலத்தீன மக்களுடனான ஒற்றுமைக்கான பன்னாட்டு நாள்